Reg. No. M.

ஸமரஸ போதினி.

"The Samarasabodhini"

"தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும் பொருள் யாதொன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்."

E. சூரியநாராயண அய்யர் பி. ஏ., பி. எல்., பத்திராதிபர். E. Suryanarayana Aiyar B. A., B. L., *Editor*.

புத்தகம் 1. | ரௌத்திரி ௵ ஆனி ௴ ௨௰௨ புதன்கிழமை 7th July 1920. தஞ்சாவூர். | பிரதி 4.

ஸமரஸ போதினி.

இஃதொரு தமிழ் வாரப்பத்திரிகை புதன்கிழமை தோறும் தஞ்சையினின்றும் வெளிவருவது. இந்தியர்கள் பிரிட்டிஷாரைப்போல சுதந்தரமும் பூரணசுய ஆட்சியும் பெற்று உலகத்தார் கண் முன்பு சுகமாகவும் தைரியமாகவும் வாழவேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பத்திரிகை ஆரம்பித்து நடத்தப்பட்டு வருகிறது. இதன் முக்கிய நோக்கம் காங்கிரஸை முழுமனத்துடன் ஆதரிப்பதாகும். அரசியல், கல்வி, விவசாயம், தொழில், வியாபாரம், தொழிலாளர் இயக்கம் முதலிய விஷயங்கள் இப்பத்திரிகையில் நன்கு விவரிக்கப்படும். எளியவர்களும் இதை வாங்கிப் படிக்கவேண்டி இதன் சந்தாவைக் குறைத்து வைத்திருக்கிறோம்.

சந்தா விவரம்:—

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு	ரூ 5—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ 3—0—0
பினாங்கு, சிங்கப்பூர், முதலிய விடங்களுக்கு	ரூ 7—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ 4—0—0

குறைந்த விளம்பர விகிதம்:—

பத்தி 1க்கு மாதம் 1க்கு	ரூ 20—0—0
இஞ்சு 1க்கு	ரூ 1—0—0

For One month 4 insertions per month per column	Rs. 20—0—0
Casual Advertisements @	1—0—0 per inch.

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் குறைந்த விகிதம் வாங்கப்படும்.

விஷயதானம் :— செய்பவர்கள் நல்ல வியாசங்களை ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை இவ்விடம் வந்து சேரும்படி எழுதி அனுப்பவேண்டும். எழுதுவோர் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தனித்தனி எழுத்தாக எழுதி அனுப்பவேண்டும்.

நல்ல வியாஸங்கள் எழுதுவோருக்கு தகுந்த ஊதியம் கொடுக்கப்படும். முழு விபரங்களுக்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

நவீனம்! நாகரீகம்!!

ஓரியண்டல்.

சுய ஆட்சிக்கு வழிகாட்டி
பட்டு அங்கவஸ்திரங்கள்.

ஒம்ரூல் சேலைகள். (காப்பிக் கலர், டீக்கலர், கோக்கோ கலர், காங்குகலர்,)
தற்கால பாங்கான ஜமக்காளங்கள் எங்களிடம் மிக சரசமாய்க் கிடைக்கும்.

விலாசம் :— ஓரியண்டல் வேர் ஹவுஸ்,
அய்யங்கடை, தஞ்சாவூர்.

லண்டன் வாச்சு & கோ.,
திருவாதி தஞ்சை ஜில்லா.



இதை ஒவ்வொருவரும் கவனியுங்கள்.

தக்கலாபம் எங்களுடைய உண்மையை ஒரே தடவை பரிசோதித்து பாருங்கள் அப்போது நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். வரவழைத்து திருப்தி இல்லாவிட்டால் உடனே ரூபாயை வாபஸ் செய்து விடுகிறோம்.

விபரம் :—புதிய பாக்கெட் லீவர் வாச்சு 5 வருஷம் உத்திரவாதமும் நடத்தாளவும் இந்தியன் கவர்ன்மெண்டு குண்டுக்குச் சரியான காலத்தைக் காட்டக்கூடியது.

1.	புதிய பாக்கெட் லீவர் வாச்சு	5—0—0
2.	ஷை மாதிரி கையில் கட்டிக் கொள்ளக்கூடியது சிலண்டர்	6—0—0
3.	ஷை அசல் சொக்க வெள்ளி	8—0—0
4.	ஷை மாதிரி நிக்கல் ரேடியம் டையலுள்ளது	7—8—0

இதைத்தவிர ஒமிகா, பிரிடியன், கெடியாரங்கள் விலை சரசமாய் வேண்டியவர்கள் அரை அணா

தேவை.

சந்தாதாரர்களை சேர்க்கவும் விளம்பரங்களை சேகரிக்கவும் ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்,
ஸமரஸ போதினி ஆபீஸ்,
எல்லையம்மன் கோவில் தெரு,
தஞ்சாவூர்.

Kerosine Gas Stoves.
கியாஸ் அடுப்புகள்.

இதன் உபயோகம் அவசியமென்பது ஜனங்கள் அறிந்த விஷயம். தனி சாமான்களும் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

கோரனஸ்ட்வ் நெ. 5. ரூ 14-0-0.

ஷன் கம்பெனி,
தஞ்சாவூர்.

ஸ்டாம்பு அனுப்பி கிரயஜாப்தா பெற்றுக்கொள்ளலாம். ஆர்டர் செய்வோர் பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டு எழுதவும்.

பெரியாரின் ஜீவிய சரிதம்.

திலகர் பெருமான்.

சென்றவார போதினியின்
(2-ம் பக்கத் தொடர்ச்சி)

VII. திலகரும் காங்கிரஸும்.

இளமை தொட்டே அடிமைதனை எவரெவரும் வெறுத் தொழிக்க,
அளவிலா உரையதனை யகிலமெலாம் பரப்பினையே. திருவிக.

ஆங்கில வரசாங்க முறையில் இந்தியக் குடிமக்கட்குள்ள குறைகளை அவ்வப்போது அதிகாரிகளிடந் தெரிவித்து நீக்கவும் தேசாபிமானத்தையும் ஒற்றுமையையும் வளர்த்து அரசியற்றுறையில் ஆவலை யூட்டவும் சுய ஆட்சி பெறுவதற்குரிய வழிகளைத் தேடவும், 1885 ம் வருடம் "இந்திய நாஷனல் காங்கிரஸ்" எனுமோர் தேசிய சபையேற்படுத்தப் பட்டது. ஆண்டாண்டுதோறும் பிரதி மார்கழி மாதம் நமது நாட்டிலுள்ள பிரதான நகரங்களில் அச்சபை கூடுவது வழக்கம். பாரத பூமியின் பல பாகங்களினின்றும் ஏராளமான பிரதிநிதிகள் காங்கிரஸுக்குப்போய் முக்கிய விஷயங்களைக் குறித்து நன்காலோசித்துத் தீர்மானங்கள் செய்து அவற்றை யதிகாரிகளிடந் தெரிவிப்பார்கள். முதற் காங்கிரஸில் எழுபத்திரண்டு பிரதிநிதிகளும் வேடிக்கைப் பார்க்க முப்பது பேரும் அவைக்கண் வீற்றிருந்ததாய்த் தெரிகிறது. சென்ற வாண்டு அமிர்தசரஸில் நடந்த காங்கிரஸுக்கு எண்ணாயிரம் பிரதிநிதிகளும் அத்தொகைக்கு மேற்பட்ட வேடிக்கைப் பார்ப்போருஞ் சென்றிருந்தனர். முப்பத்தைந்து வருடங்களுள் தேசிய சபை எவ்வளவு செழித்திருக்கிறதென்று நேயர்கள் கவனிப்பார்களாக! இச்சபையின் விருத்திக்குக் காரணம் திலகர் பிரானும் அவரது பிரசார வேலையுமென்பது மிகையாகாது.

திலகர் பெருமான் இளமை தொட்டே அடிமை வாழ்க்கையைவெறுத்தவராதலின், தன்னாட்டினோர் ஆங்கிலவாதிபத்தியத்தின்கீழ் சுதந்தரமடைய எவ்விதத்திலும் முயற்சிக்க வேண்டு மெனும் அவா அவருள்ளத்திற் குடி கொண்டிருந்தது. இவ்வபிப்பிராயத்தை நிறைவேற்றவே கடவுளருளாற் காங்கிரஸ் சபை தோன்றியதெனக் கருதினார்.

இந்திர சபையைப் பழிக்கவல்ல காங்கிரஸ் சபையில் திலகர் பெருமான் 1885 ம் வருடம் வேடிக்கை பார்ப்பவராய்ச் சென்றிருந்தனர். ஆனால் 1889 ம் ஆண்டுதான் முதலில் காங்கிரஸ் பிரதிநிதியாய்த் திலகர் போயினரென்பது காங்கிரஸ் நடவடிக்கை அடங்கிய புத்தகத்தினின்றும் விளங்குகிறது. அக்காலந் தொட்டுத் தவறாமல் ஒவ்வொரு காங்கிரஸுக்கும் திலகர் பிரதிநிதியாய்ப் போகலாயினர். அவ்வமயம் திலகர், இந்திய சட்டசபை யங்கத்தினரை மாகாண சட்டசபைப் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்க வேண்டுமென்ற ஓர் திருத்தத்தைச் சபை முன் பிரேரேபித்து அதைப் பற்றி மிகவும் உருக்கமானவோர் பிரசங்கஞ் செய்தார். இதைக் கோபால கிருஷ்ண கோகலே ஆமோதித்தார். அப்பொழுதே திலகரின் நாவன்மையும் அஞ்சா நெஞ்சும் வீரமும் அவையோர்க்கு விளங்கின. 1891 ல் நாகப்பூரில் நடந்தேறிய காங்கிரஸில் திலகர் ஆயுதச் சட்ட விதிகளைக் கண்டித்து இந்தியர்கள் ஆயுதந் தாங்கும் உரிமையை அடைய வேண்டுமெனவும் பிறதேயத்தோர் படையையும் காட்டு விலங்குகளின் கொடுமையையுந் தவிர்க்க ஆயுதங்களின்றி இயலாதென்றும் வந்திருந்தவர்கள் மனதில் பசுமரத்தாணிபோற் பதியும்படிப் பேசினார். ஒன்பதாங் காங்கிரஸில் சாசுவத வரி யேற்பாட்டைப் பற்றியும் அதனால் நமக்கு விளையும் நன்மைகளைப் பற்றியும் திலகர் விரிவாயெடுத்துக்கூறி அத்தீர்மானத்தை யாவரும் ஆதரிக்கும்படிச் செய்தார். 1895 ல் நிலவரியைக் குறைத்து என்றும் மாறாதவரி நிர்ணயிக்குந் தீர்மானத்தைப் பலத்த கரகோஷத்தினிடை ஆமோதித்துப் பேசலாயினர்.

இஃதன்றியும் காங்கிரஸ் தட்சிணக் கமிட்டியின் காரியதரிசிப் பதவியை வெகுகாலம் திலகர் பெருமான் வகித்திருந்தார். காங்கிரஸுக் குட்பட்ட பம்பாய் மாகாண மகா நாடுகளை முதல் ஐந்து வருடம் திலகர் கூட்டுவித்து அவைகள் சிறப்பாய் நடந்தேறுமாறு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர்.

இப்படியிருக்கையில் பம்பாயில் இந்து மகம்மதிய வேற்றுமைக ளதிகரித்து, இருதிறத்தாருக்கும் பெருத்த கலக முண்டாயிற்று. திலகர் பிரான் தன் பத்திரிகைகளில் இந்துக்களும் மகம்மதியர்களும் ஒற்றுமையுடன் வாழ்வதற்குத் தடையாயிருப்பது அதிகார வர்க்கத்தினரின் பிரித்தாளும் தந்திரமேயென்றும் அதற்கிடங் கொடுக்கலாகாதென்றும் வற்புறுத்திக் கொண்டிருந்தார். இவ்விதம் திலகர் தன்னாலியன்றளவு இருமதத்தினருக்கும் ஒற்றுமை யுண்டாக்கி வருநாளில் பம்பாய் மாகாண வாசிகள் தங்களுக்குத் திலகரிடமிருந்த மதிப்புக் கறிகுறியாகச் சட்ட சபைக்குப் பிரதிநிதியாய் இருமுறை தெரிந்தெடுத்தார்கள். சட்டசபை பிரதிநிதியாயிருந்த காலத்துத் திலகர் நாட்டிற்குச் செய்த நன்மைகள் அளவிடற் கரியன. பொது நலத்துக்கு விரோதமாய் அதிகாரிகள் எக்காரியஞ் செய்யத் துணிந்தாலும் திலகர் அதைத் தீவிரமாய் எதிர்க்காமலிருப்ப தில்லை. சக்கிரவர்த்தி சிவாஜியின் சமாதி யிருந்த ஒழுங்கீன நிலையிலிருப்பதாகவும் இந்தியர்களால் எங்ஙனும் கொண்டாடப்படும் அப்பெரியாரின் ஞாபகச் சின்னத்தை அரசாங்கத்தார் தகுந்தபடி சிறப்பிக்க வேண்டுமென்றும் பத்திரிகைகளிலும் பிரசங்க மேடைகளிலும் சட்டசபையிலும் திலகர் பெருமான் வாதாடி வெற்றியடைந்தார். மேலும் பம்பாய்ச் சர்வகலாசாலையிலோர் அங்கத்தினராய் நியமிக்கப்பட்டதுமன்றித் திலகர் 1895 ம் வருடம் பூனா நகர பரிபாலன சபையிலும் பிரதிநிதியாய்த் தெரிந்தெடுக்கப் பட்டனர்.

1895 ல் காங்கிரஸ் பூனா நகரில் நடைபெற்றது. தேசாபிமானிகள் திலகர் பெருமானைக் காங்கிரஸ் சபைக்குக் காரியதரிசியாய் நியமித்தார்கள். பூனாவில் காங்கிரஸ் மேன்மையாய் நடைபெறும் பொருட்டுத் திலகர் அளவிறந்த ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் வேலை செய்து வந்தார். ஆனால் திடீரென்று காங்கிரஸ் பந்தலில் ஆசார திருத்த மகா நாட்டை நடத்தும் சம்பந்தமாய்த் திலகருக்கும் ஆசார திருத்தக் காரருக்கும் விவாத மேற்பட திலகர் காரியதரிசிப் பதவியை விடுத்தனர். அங்கு நடந்த காங்கிரஸில் திலகர் இரண்டு அரிய பிரசங்கங்கள் செய்ததுமன்றித் தேசிய சபை விளங்குமாறுப் பிரசாரந் தொடங்கலாயினர்

VIII திலகரின் காருண்யம்.

1886 ம் ஆண்டு பம்பாய் மாகாணத்தில் நீலகண்டன் நெஞ்சிற்றரித்த காலவிடம் போன்றவோர் கடும் பஞ்சந் தோன்றியது. மழைக் குறைவினால் நிலவளப் பங்குன்றிப் பயிர்கள் தலைவடைந்தன. சாமான்கள் விலை பன்மடங்கேறியது. நூற்றுக் கணக்கான இந்தியர்கள் வறுமைப் பிணியாலுழன்று மாண்டார்கள். மற்றுஞ் சிலர் நிரம்பவுண்ண ஆகாரமின்றி வருந்தலாயினர். சூடமாதியாய் எல்லாப் பொருள்களும் கிடைப்பதற்கரிதாயின. அநேக குலமாதர்கள் உடுக்க உடையின்றிக் கண்ணுங் கண்ணீருமாய்த் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

காருண்ய வடிவான திலகர் பெருமான் ஏழைகள் படுந் துன்பத்தைச் சகியாது, அதை நிவர்த்தி செய்ய வேண்டிப் பரிகாரங்கள் தேடத் தலைப்பட்டார். செல்வம் படைத்தோரிடம் நேரிற் சென்று வறுமையால் வருந்துவோருக்கு வேண்டிய பொருளுதவி செய்யுமாறு மிகவும் மன்றாடினார். தனது பத்திரிகைகளின் ஒவ்வொரு பிரதியிலும் குடிகளின் ஆற்றொணாத் துயரத்தைக் குறித்து அனுதாபங் காட்டி யெழுதிவந்தார். பூனாவிலுள்ளோர் திலகரைத் தெய்வமாகக் கருதி வந்தமையால் அவர் வார்த்தைக் கிணங்கிப் பெருஞ்சீமான்கள் ஒன்று சேர்ந்து அளவிறந்த திரவியங் கொடுத்துதவி புரிந்தார்கள். அதைக் கொண்டுத் திலகர் பெருமான் உணவுப் பொருள்களை வாங்கி அவற்றை மிகக்குறைந்த விலைக்கு விற்கும்படி யேற்பாடு செய்தார். பிரசங்கவாயிலாகவும் பத்திரிகை வாயிலாகவும் நாட்டிலுண்டாயிருக்குந் தீமையை யதிகாரிகள் உணரும் படிச் செய்து பஞ்சத்தை நீக்கவேண்டிய வழிகளை யரசாங்கத்தார் கைக்கொள்ள வேண்டுமென்றும் அவ்வருடம் குடிகளிடம் நிலவரி வசூல் செய்யலாகாதென்றும் வற்புறுத்தினார்.

ஷோலாப்பூரிலும் ஆமத்நகரிலும் நெசவுத் தொழிலாளர் படுந்துயரத்தைத் திலகர் கேள்வியுற்று ஆங்காங்குச் சென்றுத் தனவந்தர்களைப் பணவுதவி செய்யுமாறு வேண்டினார். நெசவுக்காரர் குறைகளை நீக்கிப் பலசங்கங்களேற் படுத்தியவைகளை அதிகாரிகளோடு ஒத்துழைக்கும்படித் தூண்டினார். இவ்விடயமாய்த் தனக்குத் தோன்றிய சில பரிகாரங்களைத் திலகர்பிரான் அரசாங்கத்தினருக்குத் தெரிவித்தும் அவர்கள் அலட்சியஞ் செய்தார்கள். ஏனென்றால் அதிகார வர்க்கத்தாருக்குத் திலகரிடத்துச் சில வருடங்களாய்க் கோபமதிகரித்து பஞ்சகாலங்களில் சட்டப்படி அரசாங்கத்தார் செய்யவேண்டிய கடமைகளைத் திலகர் பயமின்றிக் குடிகளிடம் வெளிப்படுத்தியதனாலும் ஸர்வஜனச் சபை மூலமாய் இடைவிடாது கிளர்ச்சிசெய்து வந்தமையாலும் தொழிலாளர்கள் திலகரைத் தெய்வமாய்ப் பாவித்ததனாலும் அதிகாரிகள் திலகர் மேற்பொறாமை கொண்டு அவரை வெறுக்கலாயினர்.

(11ம் பக்கம் பார்க்க)

நமது நேயர்களுக்கு.

நமது நேயர்கள் தங்களது சந்தாத் தொகைகளை காலதாமதமன்னியில் அனுப்பித்தரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

(ப. ர்.)

ஸமரஸபோதினி தஞ்சாவூர்.

"Be just aud fear not,
Let all the ends thou aimest at,
Be thy Country's, thy God's&Truth's"

ரௌத்திரி௵ ஆனி௴ ௨௰௩ புதன்கிழமை.

7th JULY 1920.

இதுதான் சமயம்.

தற்சமயம் உலகம முழுவதும் பெரும் குழப்பத்திலிருக்கிறது. எங்குப் பார்த்த போதிலும் சுதந்திரத்திற்காகவும், சுய நிர்ணயத்திற்காகவும் பலமான கிளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. ஜனங்கள் ஜன நாயக ஆட்சி மேலான தென்று ஆதரித்து வருகிறார்கள். மகா யுத்தத்தின் பயனாக உலகத்தில் அநேக ராஜாங்கங்களில் விசேஷமான சம்பவங்கள் நேரிட்டிருக்கின்றன. அநேக மன்னர்கள் இருந்த விடம் தெரியாமல் போய்விட்டார்கள். சில ராஜர்கள் தமக்கு அப்பதவி வேண்டாமென்று ஒழித்துவிட்டோடிப் போய்விட்டார்கள். உலகத்திலுள்ள ஜனங்கள் பலவிதமான கஷ்டங்களை அநுபவித்துவருகிறார்கள். உணவுப்பொருள்களின் குறைவினாலும் விலையேற்றத்தினாலும் பெரும் வியாதிகளின் கொடுமையாலும், அநீதியின் அதிக்கிரமத்தினாலும், முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள சண்டை சச்சரவுகளினாலும் உண்டாயிருக்கிற துன்பங்கள் சொல்லி முடியா. இவ்வுணர்ச்சியும் இந்நிலைமையும் நமது தாய்நாடாகிய இந்தியாவிலும் பார்க்கலாம்.

நமது தேசத்தின் முன்னேற்றத்தை உத்தேசித்துப் பல வருஷங்களாக நமது தேசாபிமானிகள் தேச ஊழியம் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் செய்து வருகிற பெரும் முயற்சியின் பயனாகச் சில நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் சபையானது தேச மகாசபையாக யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் மகா ஜனங்களும், பார்லிமெண்டாரும் காங்கரெஸ் செய்யும் தீர்மானங்களைத் தேச மகாஜனங்களின் தீர்மானங்களாகக் கருதி வருகிறார்கள்.

கோடிக்கணக்கான ஜனங்கள் காங்கரெஸ் செய்து வரும் வேலையை நன்கு அறிந்திருக்கிறார்கள். அம் மகாசபையின் கொள்கைகள் இன்னவை என்றும் உணர்ந்திருக்கிறார்கள். அதன் தீர்மானங்களின்படித்தான் நடப்பது நியாயமென்றும் சொல்லத் துணிந்துவிட்டார்கள். அத் தீர்மானங்களை அனுஷ்டித்துக் காட்டவேண்டியது மிகவும் அவசியமென்று வற்புறுத்தி வருகிறார்கள்.

தேச பாஷையில் பிரசுரிக்கப்படும் "சுதேசமித்திரன்" "தேசபக்தன்" முதலிய தமிழ் பத்திரிகைகளின் வாயிலாகத் தேச மகா ஜனங்கள் நமது நாட்டின் தற்கால நிலைமையையும் அதிகார வர்க்கத்தினரின் போக்கையும் மனோ பாவத்தையும் தெளிவாய் தெரிந்துகொண்டுவிட்டார்கள். தமது ஜீவாதாரமான உரிமைகளுக்காகப் போராடத் தலைப்பட்டுவிட்டார்கள். தமக்கு சுயாட்சி கிடைத்தாலொழிய தங்களுடைய கஷ்டங்களும் துன்பங்களும் நீங்காவென அபிப்பிராய முள்ளவர்களாய்விட்டார்கள். அவ்வபிப்பிராயத்தை எங்கும் பரவச் செய்யப் பிரசார வேலை அத்யாவசியமென்று கருதி அதற்குச் சரியான ஏற்பாடுகள் தலைவர்கள் செய்யவேண்டுமென்று கட்டாயப்படுத்தி வருகிறார்கள்.

இதோடு நில்லாமல் சமயம் நேர்ந்தபோதெல்லாம் மகா நாடு கூட்டிப் பெரிய விஷயங்களாகிய கிலாபத், பஞ்சாப் படுகொலை, ஹண்டர் கமிட்டி ரிபோர்ட், சீர்திருத்த சட்டம், அதன் நிபந்தனைகள் முதலியவைகளைப் பற்றி விவாதித்துத் தீர்மானங்கள் செய்து கிளர்ச்சி செய்கிறார்கள்.

இவையெல்லாம் நேரில் அறிந்த ஜனத்தலைவர்களின் கடமை என்ன? அவர்கள் சும்மாயிருப்பதா? அல்லது ஜனங்களுக்குச் சரியான வழிகாட்டிச் செல்வதா? வழிகாட்டிச் செல்வது தான் தர்மமாகும். அப்படிச் செய்யாமல் சுய நலத்தைப் பெரிதாகக் கருதி அசட்டையாயிருந்தால் தேசத்திற்குத் துரோகம் நினைப்பதாகும். ஆகையால் தலைவர்கள் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து தேசத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்க முன்வரவேண்டும்.

தேசாபிமானியாகிய ஒவ்வொரு தலைவரும் ஜனங்களுள் ஒற்றுமையை விருத்தி செய்யவேண்டும். ஒற்றுமை ஏற்படவேண்டுமானால் கட்சிப்பிரதி கட்சிகள் கூடவே கூடாது. பொது விஷயங்களில் ஒரே நோக்கத்துடனிருக்கவேண்டும். மிதவாதி யென்றும், அமிதவாதி யென்றும் பிரிந்து நிற்கக்கூடாது. பிராமணர் பிராமணரல்லாதார் என்றும் பேத புத்தி இருக்கவே கூடாது. தலைவர்கள் ஒற்றிருந்தால் தான் தேச மகா ஜனங்கள் அவர்களை பின்பற்றுவார்கள்.

தலைவர்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருப்பது நமது துர் அதிருஷ்டமே. ஆனால் பட்சபாதமன்னியில் சத்தியத்தையே நாடி அவரவர்கள் தம் மனச்சாட்சியின்படி நடப்பார்களானால் இந்தப் பேதமெல்லாம் மறைந்துபோய்விடும். ஏனெனில் உண்மையை அறிந்து கொண்டால் சண்டை இராது. சில தலைவர்கள் உண்மையை அறியாவிடினும் தேச மகா ஜனங்கள் அறிந்திருக்கிறார்கள். உண்மையை அறிந்த ஜனங்கள் உண்மையை அறியாத தலைவர்களோடு ஒத்துழைக்கமாட்டார்கள். அவர்கள் முன்னோக்கித்தான் செல்லுவார்கள். அம்மகாப் பிரவாகத்தைத் தடுக்க ஒருவராலும் முடியாத காரியம்.

ஆகையால் மகா ஜனங்களின் அபிப்பிராயத்தை அனுசரித்துச் செல்லவேண்டிய சமயம் இதுவே. இதை நழுவவிட்டால் தேசம் பிற்போக்கை அடையும் என்பதில் சந்தேகமில்லை. ஆனது பற்றி மிகவும் சுறுசுறுப்போடு தலைவர்கள் மகா ஜனங்களின் லட்சியத்தை அறிந்து தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். கிராமந்தோறும் சென்று ஜனங்களுக்குத் தற்கால நிலைமையைப்பற்றியும், அவர்களின் ஜீவாதாரமான பிறப்புரிமைகளைப்பற்றியும், புதிய சீர்திருத்த சட்டத்தைப்பற்றியும், அனுஷ்டானத்திலிருக்கும் அடக்கு முறைகளைப்பற்றியும், அதிகார வர்க்கத்தினரால் செய்யப்படும் அக்கிரமங்களைப்பற்றியும் சட்ட சபைகளுக்கு யாரைத் தெரிந்தெடுக்கவேண்டுமெனும் விஷயத்தைப்பற்றியும் விரிவாய் எடுத்து சொல்லுவது தலைவர்களின் முக்கிய கடமையாகும். இதோடு நிற்காமல் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மகா ஜன சபை ஏற்படுத்தவேண்டும். அது காங்கிரஸ் மகா சபையின் கிளையாகவிருக்கவேண்டும். இதன் மூலமாய்த் தான் எல்லா நடவடிக்கைகளும் நடத்தப்படவேண்டும். சில கிராமங்களுக்கு மாதம் ஒரு முறையாவது தலைவர்கள் போகவேண்டும். அந்த கிராமங்களின் குறைகளை நேரில் தெரிந்துகொண்டு சரியான பரிகாரங்களைத் தேடிக் கொடுக்கவேண்டும். முக்கியமான விஷயங்களைப்பற்றி அப்போதைக்கப்போது துண்டுப் பிரசுரங்களை எழுதி ஏராளமாய் கொடுக்கவேண்டும். புத்திசாலியானவர்களும் விஷயம் அறிந்தவர்களும் அனுபவமுள்ளவர்களுமான பலரை பிரசார வேலைக்காக ஆங்காங்கு அனுப்பவேண்டும். ராஜீய விஷயங்களைத் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்று ஜனங்கள் ஆவலோடிருக்கிறார்கள். ஊக்கமும் உத்ஸாகமும் காட்டி வருகிறார்கள். இச்சமயத்தை கைப்பற்றிக்கொள்ளாமல் சும்மாயிருந்துவிட்டால் நமது தேசம் பெரும் கஷ்டங்களுக்குள்ளாகும். சமயம் அறிந்து நடப்போமானால், நாமும், நம் தேசமும், நம் சந்ததியர்களும் சுகமாய் வாழலாம்.

நியாயமிது தானே?

தஞ்சாவூர் தபால் இலாகாவில் வேலை பார்த்து வரும் பொன்னுசாமி என்பவர் தம்மை ஸ்பெஷல் செட்டில்மெண்டு ஆபிஸர் மிஸ்டர் ஜாக்ஸன் அடித்து துன்பப்படுத்தியதாக கொண்டுவந்த கேஸ் வாதிக்கு விரோதமாக அடிஷனல் டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டால் தீர்ப்பு செய்யப்பட்டது. வாதியின் பிரமாணவாக்கு மூலத்தையும் தக்க சாட்சிகளின் வாக்குமூலங்களையும் டாக்டரின் சர்டிபிகேட்டையும் நம்பாமல், மிஸ்டர் ஜாக்ஸன் வாக்குமூலத்தை முற்றிலும் நம்பி எதிரியை விடுதலை செய்து விட்டார். மாஜிஸ்திரேட் சொல்லும் காரணங்கள் சரியானவையல்லவென்று அபிப்பிராயப் படுகிறோம். வாதியை சிலர் தூண்டி விட்டிருக்கிறார்களென்றும் வாதியின் சாட்சிகள் சுத்த பொய்யர்களென்றும், மிஸ்டர் ஜாக்ஸன் பெரிய உத்தியோகம் வகிப்பதால் அவர் மீது வேண்டுமென்று கேஸ் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்றும் தீர்ப்பில் மாஜிஸ்திரேட் கூறி இருக்கிறார். பொய்யாக ஒரு தபால் இலாகாவைச் சேர்ந்தவர் கேஸ் கொண்டுவருவானேன்? வாதிக்கும் எதிரிக்கும் எதாகிலும் மனஸ்தாப முண்டா? இல்லையென்பதாகவே தெரியவருகிறது.

அப்படியானால் வீணாக ஒருவர் மற்றொருவர் பேரில் அபாண்டமாக நடவடிக்கைகள் நடத்துவாரா? அவர்களுக்கு வேறுவேலையில்லையா? சொற்ப சம்பளம் வாங்கும் ஒரு சேவகருக்கு காலக்ஷேபம் செய்வதே மிகவும் கஷ்டமாயிருக்கும் இந்நாளில் கோர்ட்டு வியவகாரங்களில் பணத்தை செலவழிப்பாரா? இவைகளை கவனியாமல் மாஜிஸ்திரேட் தீர்ப்பு செய்திருப்பது மிகவும் ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது. மேலும் "வாதிக்கு காயப்பட்டது வாஸ்தவம் தான்" என்று தீர்ப்பில் சொல்லுகிறார். அப்படி இருந்தும் நியாயம் எங்கேபோ போயிற்று. இம்மாதிரி நியாய பரிபாலனம் நடந்தால் எவர்தான் கீழ் உத்தியோகத்தில் அமருவார்கள்? அதிகார வர்க்கத்தினர் செல்வாக்குள்ளவர்கள் தான். இஷ்டம் போல் நடக்கிறவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

தர்ம விசாரணையில் உத்யோகம் அந்தஸ்து என்பதை கவனிக்கக்கூடாது. ஆளுவோர் அல்லது ஆளப்படுவோர் எனும் வித்யாசத்தை பாராட்டக் கூடாது. வர்ண பேதத்தை கொண்டாடக்கூடாது. நியாயத்தை நாடியே தீர்க்கவேண்டும். ஜாதி, மதம், வர்ணம் என்கிற பேதங்களை கவனியாமல் நியாயம் புரிவோம் என்னும் பிரிடிஷ் கொள்கை எங்கு போயிற்று? "குதிரை தள்ளியது மன்றியில் குழியைப் பறித்ததாம்" என்னும் பழமொழிபோல் எதிரியை விடுதலை செய்ததுமன்றியில் வாதி எதிரிக்கு ரூபாய் 50 அபராதம் கொடுக்கும்படி உத்தரவு செய்திருப்பதைப் பார்த்தால் இனி நாம் என்செய்வதென்று தெரியவில்லை. வாதி அடைந்த காயத்திற்கு ஜவாப்தாரி யாரோ தெரியவில்லை? இது நியாயந்தானே!

சமாசார குறிப்பு

தஞ்சை ஜில்லா வர்த்தமானம்.

தஞ்சையில் தலைவர்களின் விஜயம்

மெஸ்ஸர்ஸ் எஸ். கஸ்தூரிரங்க அய்யங்காரும், எஸ். ஸத்தியமூர்த்தியும், எ. அரங்கசாமி அய்யங்காரும 3—7—20 காலை 8-மணிக்கு இங்கு விஜயமானார்கள். மாலை 6-மணிக்கு மணிக்கூண்டில் ஓர் பெரிய மகாநாடு கூடிற்று. கனம் ராவ் பகதூர் வி. கே. ராமானுஜாச்சாரியார் அக்கிராசனம் சிறிது நேரம் வகித்தார். பிறகு ராவ் பகதூர் ஸ்ரீமான் என். கிருஷ்ணசுவாமி அய்யங்கார் அக்கிராசனம் வகிக்க ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்கார் எலெக்ஷன் கமிட்டியைப்பற்றியும், கிலாபத்தைப்பற்றியும் காங்கிரஸ் கட்சியாரைப் பற்றியும், மிதவாதிகளின் கொள்கைகளைப்பற்றியும் தமிழில் பிரசங்கித்தார். அதன்பிறகு ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தியவர்களும், ஸ்ரீமான் அரங்கசாமி அய்யங்காரும் பல முக்கியமான விஷயங்களைப் பற்றி பேசினார்கள்.

1920ஹு ஜுலைமீ 3உ சனிக்கிழமைமாலை 3—15 மணிக்கு தஞ்சாவூர் கலெக்டராபீஸ் கட்டிடத்தில் தஞ்சை ஜில்லா போர்டு ராவ் பகதூர் கனம் வி கெ. ராமானுஜ சாரியார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று. மீட்டிங்கில் பல விஷயங்கள் கவனிக்கப்பட்டன. 1920ஹு மார்ச்சுமீ முடிய லோகல் பண்டு பள்ளிக்கு வேலைகளுடைய விருத்தியாயசத்தை தெரிவிக்கிற ரிபோர்ட்டு படிக்கப்பட்டது. மேலும் நீடாமங்கலம் ஜங்கிஷனில் வண்டித்தொடர்கள் போஜன காலத்தில் போய் இதர ஊர்களிலிருந்து சேருவதனால் ஷடி சாப்பாட்டு சௌகரியத்தை உத்தேசித்து வடவண்டை பிளாட்பாரத்தில் சுதேசிகளுக்கு சாப்பிடுமிடம் ஒன்று தற்காலம் கட்டப்படவேண்டுமென்றும், வெயிலிலும் மழையிலும் ஸ்திரீகளும் குழந்தைகளும் படும் அவஸ்தையை நீக்குவதற்காக திருவாரூர் ரயில்வே ஸ்டேஷனில் மேம்பாலத்திற்கு கூரைபோடவேண்டுமென்று ரயில்வே கம்பெனியாரை போர்டார் வற்புறுத்துகிறார்களென்றும் தீர்மானிக்கப்பட்டது. சத்திரம் டிபார்ட்மெண்டு சம்பந்தமான பல பில்கள் சாங்கிஷன் செய்யப்பட்டன. இந்த மீட்டிங்கில் கலெக்டரவர்களும் போர்டு எஞ்சினியர் அவர்களும் ஆஜராயிருந்தார்கள். விசேஷமாக தமிழில நடவடிக்கைகள் நிறைவேறின. ராவ் பகதூர் கெ. எஸ். வெங்கடராமய்யரைப் போல மற்ற மெம்பர்களும் போர்டு நிர்வாகத்தை கவனிப்பார்களாக.

1920ஹு ஜுலைமீ 11உ மாலை 3 மணிக்கு தஞ்சை கோட்டைக்குள் ராஜகோபால சுவாமி 773 நெ. வீட்டில் "தஞ்சை தேசிய வித்யாலயம்" என்று ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்படும். அச்சமயம் சென்னை ஹைகோர்ட் வக்கீல் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்கள் ஸி. ஐ. இ. பிரசன்னமாயிருந்து அவ்வித்தியாலயத்தை திறந்துவைப்பார். அன்று மாலை 6-மணிக்கு மணிக்கூண்டு மைதானத்தில் ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் ஓர் உபந்யாசம் செய்வார்.

நாளது மாதம் 4-ம் தேதியில் அய்யம்பேட்டையில் அஞ்சுமான் ஹிதாயத்துல் இஸ்லாமின் 4 வது வருஷக்கொண்டாட்டம் வெகு விமரிசையுடன் நடைபெற்றது. ஸ்ரீமான் எஸ். ஸத்தியமூர்த்தி அய்யாவர்கள் அக்கிராசனம் வகித்தார். சுமார் 500 முஸ்லீம் சகோதரர்களும் 100 ஹிந்து கனவான்களும் பிரசன்னமாயிருந்தனர். மண்டபம் வெகு அலங்காரமாய் அமைக்கப்பட்டிருந்தது. குர் ஆன் ஓதிய பிறகு சில சிறுவர்கள் அக்கிராசனாதிபதிக்கு ஒரு நல்வரவு பத்திரத்தை வாசித்து கொடுத்தார்கள். பிறகு வரவேற்பு கமிட்டி சேர்மென் கு இ. முகம்மது காசிம் சாயபு அவர்கள் ஓர் அரிய பிரசங்கம் செய்தார். முற்கால முஸ்லீம்களின் கல்வி நிலைமையைப்பற்றியும் தற்கால முஸ்லீம்களின் நிலைமையைப் பற்றியும், கிலாபத்து சம்பந்தமாயும், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைப்பற்றியும் பல விஷயங்களை எடுத்துச்சொன்னார்.

ஸ்திரீகளுக்கு கல்வி அவசியம்வேண்டும் என்பதைப்பற்றியும், கிலாபத்து கமிட்டியை ஏற்படுத்தும் விஷயமாகவும், பஞ்சாப் படுகொலைகளைப்பற்றியும், ஹண்டர் கமிட்டி ரிபோர்ட்டைப்பற்றியும் சில தீர்மானங்கள் செய்யப்பட்டன. ஸ்ரீமான் என் கிருஷ்ணசுவாமி அய்யங்கார், ஸ்ரீமான் வி. எஸ். கிருஷ்ணசுவாமி அய்யர் ஸ்ரீமான் எ. அரங்கசாமி அய்யங்கார், ஸ்ரீமான் இ. சூரியநாராயண அய்யர், ஸ்ரீமான் திருவாரூர் ஞானியார் முதலியவர்கள் வெகு அழகாய் பேசினார்கள். அக்கிராசனருக்கும் மற்ற கனவான்களுக்கும் முகம்மது காசிம் சாயபு அவர்களால் வந்தனம் அளிக்கப் பூமாலைகள் சூட்டப்பட்டன. இரவு 10—30 மணிக்கு மகாநாடு கலைந்தது. முஸ்லிம் சகோதரர்களின் ஊக்கம் அளவற்றதாயிருந்தது.

கண்ணம்பாடி அணை

கண்ணம்பாடி அணைக்கட்டு விஷயமாய் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டிருப்பதை யாவரும் அறிந்த விஷயமே. அதை ஒருவிதமாக முடிக்கும் பொருட்டு சென்னை கவர்ன்மெண்டு எஞ்சினீயர்களும் மைசூர் கவர்ன்மெண்டு எஞ்சினீயர்களும் அந்தரங்கமாய் கூடியோசித்து வருகிறார்கள். சில வருஷங்களுக்கு முன் மத்யஸ்த சபையால் செய்த தீர்ப்புக்கு விரோதமாக சென்னை கவர்ன்மெண்டார் செய்து கொண்ட மனுவின் மேல் இந்தியா மந்திரி மத்யஸ்த சபையின் தீர்ப்பை ரத்து செய்து விட்டார். அதன் பலனாகவே இக்கூட்டம் கூடிற்று. முக்கியமாய் எவ்வளவு அடி ஜலம் காவிரியில் விடவேண்டும், ஜலத்தின் அளவு, அணைக்கட்டின் நிர்வாகம், மேற்பார்வை இவ்விஷயங்களைப் பற்றிதான் அபிப்பிராய பேதங்களிருந்து வந்தன. இப்பெரிய காரியத்தை தீர்க்காலோசனையோடும் நியாயவிரோதமின்றியும் தீர்த்து வைப்பார்களென்று நம்புகிறோம்.

1920ஹு ஜுலைமீ 10ம்தேதி சனிக்கிழமைய தினம் நன்னிலம் (சன்னலூர்) நாடார் சத்திரத்தில் கும்பகோணம் ஹைகோர்ட் வக்கீல் ஸ்ரீமான் ராவ்பகதூர் என். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நமது சிறந்த தேசபக்தரான சென்னை ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் (சட்ட சபையும் தேசிய கட்சியும்) என்ற விஷயமாக ஓர் உபந்யாசம் நடைபெறும்.

தஞ்சை ஸமாஸ போதினி பத்திராதிபர் ஸ்ரீமான் சி. சூரியநாராயண அய்யர் ஸ்ரீமான் செகுநிமிப முகவ அய்யங்கார் சி. எஸ். கிருஷ்ணசாமி அய்யா முதலியவர்களும் பேசுவார்கள்.

நீடாமங்கலம் பஞ்சாயத்து.

உள்ளூர் தேவஸ்தானங்களின் மானேஜிங் பஞ்சாயத்து ஸ்தானத்தை அரசூர் மிஸ்டர் A. S. பஞ்சாபிகேச உடையாரவர்கள் காலஞ்சென்ற நாள் முதல் நாளது தேதி வரையில் இவ்வூர் ஆலயங்களுக்கு டிரஸ்டி நியமனம் செய்யாமல் நம்முடைய தஞ்சை தேவஸ்தான கமிட்டியார் வீணான காயகாலம் செய்வதின் விவரம் வெளிப்படையாக விளங்கவில்லை. ஆலயங்களுக்கு ஏராளமான ஐவேஜிபு இருக்கின்றன. இனியாவது கனம் பொருந்திய தஞ்சை கமிட்டியார் நீடாமங்கலம் கோவில்களுக்கு டிரஸ்டி நியமனம் செய்வார்களா? யார் டிரஸ்டியாக வந்தாலும் பாதகமில்லை.

ரயில் வசதிக்குறைவு.

சென்ற வாரம் மன்னார்குடியில் நடந்த தெப்போத்ஸவத்துக்கு நீடாமங்கலமிருந்து பிரயாணிகளை ஏற்றிச் செல்ல ஸ்பெஷல் வண்டிகளை விடாமல் போனாலுங்கூட வழக்கமாய் விடப்பட்டுவந்த வண்டிகளில் ஜாஸ்தி வாகனங்களை சேர்க்காமலிருந்ததால் பாசஞ்சர்கள் நிரம்பவும் கஷ்டப்பட்டார்கள். இதைப்பற்றி ரயில்வே அதிகாரிகள் கவனித்ததாக தெரியவில்லை. உத்ஸவ காலங்களில் ஜாஸ்தி வாகனங்களை சேர்க்கவேண்டியது ரயில்வே கம்பெனியாரின் முக்கிய கடமையல்லவோ?

விஜயம் செய்து திரும்பினார்.

நம் தஞ்சைஜில்லா போர்டு உத்தியோகப்பற்றுதலில்லாத பிரிசிடெண்டு ஆனரபிள் ராவ்பகதூர் ஸ்ரீமான் V. K. ராமாநுஜச்சாரியார் அவர்கள் சென்ற ஜூன்மாதம் 24ல் இவ்விடம் முகாம் செய்து ராஜா சத்திரத்தையும் யூனியனையும் பார்வையிட்டார். யூனியன் சேர்மன், மெம்பர்கள் அக்கனவானை கண்டு வார்த்தையாடினார்கள்.

மறு தினம் மோட்டாரில் கொடவாசலுக்கு சென்றார். இவரது பரிபாலனம் போகப் போகத்தான் ஜனங்களுக்கு தெரியவரும். அக்கனவானை நமது கவர்ன்மெண்டார் அப்பதவிக்கு தெரிந்தெடுத்தது பொருத்தமுள்ளதே.

முகாம்

மன்னார்குடி டிவிஷன் டிப்டிகலெக்டர் மிஸ்டர் கோவிந்தநாயர் அவர்கள் இன்று முதல் 6 நாளைக்கு இவ்விடம் முகாம் செய்வார்கள்.

எலெக்ஷன் விசாரணை.

சென்ற டிசம்பர் மாசம் 8௳ நீடாமங்கலம் ரேஞ்சு தாலூகா போர்டு எலெக்ஷனில் காண்டிடேட்டர்களாக மெஸ்ஸர்ஸ் பெறம்பூர் மிராசுதார் இராமநாதய்யரவர்களும், மன்னார்குடி மிஸ்டர் நாகப்ப மண்ணையரும் நின்றதில் ஜாஸ்தி வோட் மிஸ்டர் இராமநாதய்யரவர்களுக்கு கிடைத்தபடியால் அவரை தாலூகாபோர்டு மெம்பராக டிக்ளேர் செய்தார்கள். இவ்விஷயமாய் மற்றொரு காண்டிடேட் மிஸ்டர் நாகப்ப மண்ணையர் முறைப்படி ஆக்ஷேபனை செய்து தஞ்சை கலெக்டரவர்களிடம் மனு கொடுத்ததில் அம்மனுவை விசாரணை செய்து அனுப்ப மன்னார்குடி டிப்டிகலெக்டர் மிஸ்டர் கோவிந்தநாயர் அவர்களிடம் வந்தது. மேற்படி மனு விஷயமாய் சாக்ஷிகள் பூராவிற்கும் விசாரணையாய்விட்டதாக தெரிய வருகிறது.

மன்னார்குடி தெப்போத்ஸவம்.

இந்நகர் ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி கோவில் வருஷாந்திர தெப்போத்ஸவம் நேற்றிரவு (1—7—1920) சேரன்குளம் ஸ்ரீமான் திருவெங்கடசாமி அய்யங்கார் அவர்கள் நாளது வருடம் மானேஜிங் மெம்பர் ஸ்தானத்தை மிஸ்டர் முதலியாரவர்கள் வகிக்க முடியாதென்று கொடுத்த பிரகாரம் அப்பதவியை பற்றுக் காண்டு முன் வருஷங்களைவிட சிறப்பாக பிரம்மோத்ஸவம் நடத்தியது போல் நடத்தினார்.

உள்நாட்டு சமாசாரம்.

சென்னை சட்டசபை.

மாகாண. சட்டசபையின் அடுத்தகூட்டம் இம்மாதம் 13-ந் தேதி சென்னையில் நடைபெறும். அச்சமயம் கண்ட்ரோல் அரிசியின் விற்பனை சம்மந்தமாயும், கிராமஉத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக்குறித்தும், கனம் அகமத்தம்பிமரக்காயர் சில கேள்விகளை கேட்பாரென்றும், மறு சட்டம் செய்யும்வரையில் மறு செட்டில்மெண்டை நிறுத்திவைக்கும்படியும், கிராம உத்தியோகஸ்தர்களுக்குபிரயாணப்படி கொடுக்கவேண்டுமென்றும் கனம் சிவாராவ் சில தீர்மானங்களை பிரேரிப்பார். பல உபயோகமான விஷயங்களைப்பற்றி கேள்விகள் கேட்கப்படும். சில முக்கியமான தீர்மானங்களும் செய்யப்படுமென்று எதிர்பார்க்கிறோம்.

துருக்கி விஷயமுஸ்லீம்களின் விருப்பப்படி திருப்திகரமாக முடிவு செய்யப்படாமற்போனால், கிலாபத்து கமிட்டியார் ஆகஸ்டு மாதம் முதல் இந்துக்களும் முஸ்லீம்களும் கவர்ன்மெண்டாருடன் ஒத்துழைக்க முடியாதென்று அறிவித்துவிட்டார்கள்.

கவர்ன்மெண்டாருடன் ஒத்துழைக்க முடியாதென்று ஏற்பட்டவுடன், கிலாபத்து கமிட்டியார் முதலாவதாக எட்டு உபாயங்களைக் கையாளவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகளாவன?

(1) பட்டங்களையும் கௌரவ உத்தியோகங்களையும் ராஜிநாமா செய்தல் (2) கவர்ன்மெண்ட் கடன் வாங்கும் விஷயத்தில் சம்பந்தப்படாமலிருத்தல் (3) வக்கீல்களின் உதவியின்றி விவகாரங்களை மத்தியஸ்தர்கள் மூலமாக முடிவு செய்துகொள்ளுதல் (4) கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றோர்கள் படிக்க அனுப்பாமலிருத்தல் (5) புதுசட்டசபைகளைப் பஹிஷ்காரம் செய்தல் (6) கவர்ன்மெண்ட்விருந்துக் கச்சேரிகளுக்கும் போகாமலிருத்தல் (7) மெஸபடோமியாவில் ராணுவத்திலேனும் ஸிவில் உத்தியோகத்திலேனும் உத்தியோகம் பெறாமலிருத்தல்; இராணுவத்தில் சேராமலிருத்தல் (8) சுதேசிய சாமான்களை வாங்கி ஆதரித்தல்.

இந்த எட்டுவித உபாயங்களைக் கையாளுவோர் தவிர இதர ஜனங்கள் இவ்விஷயங்களில் நேராக கலந்துகொள்ளாமலிருந்தாலும், அனுதாபம் செலுத்துமாறு கிலாபத் கமிட்டியாரால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

இப்போது வழங்கப்பட்டிருக்கும் சீர்திருத்தத்தை ஒன்றுமில்லாமல் செய்துவிட அதிகாரவர்க்கத்தினர்கள் முயலும்போதும் பஞ்சாப் படுகொலைக்குக் காரணமாயிருந்தவர்களும் அவர்களுக்கு அனுகுணமாகவிருப்பவர்களும் சிறிதும் வருத்தப்படாமலிருக்கும்போதும் பொது ஜனத்தலைவர்கள் கவர்ன்மெண்டாருடன் எப்படி ஒத்துழைக்கமுடியுமென்று லாலா லஜபதிராய் விளக்கி லாகூரில் வெளியாகும் 'டிரிப்யூன்' பத்திரிகைக்கு ஒரு வியாசமெழுதியிருக்கிறார்.

இம்மாதம் 2-ந் தேதி பம்பாயில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அதில் ஸ்ரீமான் கே. நடராஜன், பண்டிதர் மாளவ்வியா பஞ்சாப் படுகொலையைப்பற்றி பேசினார்கள். அக்கிராசனம் வகித்த ஸர். நாராயன் சந்தாவர்க்கர் பஞ்சாப் அக்கிரமங்களுக்குப்பொறுப்பாளியாகவிருந்த லார்ட் செம்ஸ்போர்டு உத்தியோகத்தினின்று அழைக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தினார்.

இம்மாதம் 24, 25-ந் தேதிகளில் 4-வது பல்லாரி ஜில்லா மகாநாடு ஹாஸ்பேட்டையில் கூடும் அவ்வமயம் திவான். வி. பி. மாதவராவ் அக்கிராசனம் வகிப்பார்.

புது சட்டசபைக்குப் பிரதிநிதிகளாக நிற்பவர்கள் லஞ்சம் கொடுத்தோ அல்லது இன்னும் நியாயவழிதப்பித் தங்களுடைய செல்வாக்கைத் துர்விநியோகப்படுத்தியோ ஓட்டர்களிடமிருந்து ஓட்டு பெற்றாலும், அல்லது ஓட்டர்கள் தங்களுடைய ஓட்டுகளைத் துர்விநியோகமாகக் கொடுத்தாலும், அவர்களைத் தண்டிக்க ஒரு மசோதாகொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன் நோக்கங்களும் இவ்வாரத்திய கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

நமது இளவரசர் அடுத்த வருஷம் ஜனவரி மாதம் 15-ந் தேதி கல்கத்தாவுக்கு விஜயம் செய்வாரென்றும் அங்கு 21-ந் தேதிவரை தங்குவாரென்றும் வங்காள கவர்னர் லார்ட் ரொனல்ஷே அறிவித்திருக்கிறார்.

ஹிந்தி பாஷையை இந்தியர்களெல்லோருக்கும் பொது பாஷையாகச் செய்யவேண்டுவது இந்திய ஜன நிர்மாணத்திற்கு அவசியமென்று எல்லோராலும் கருதப்பட்டிருப்பதால், அப்பாஷையை ஆதரிக்கவேண்டிய நோக்கத்துடன் எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் பிரதிதினம் மா[illegible] ஒரு மணிநேரம் மாணவர்கள் அதைக் கற்றுக்கொள்ள பாடசாலையதிகாரிகள் வசதிகளேற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்றும் அதற்கு வேண்டிய செலவுகளனைத்தையும் இந்திய பிரசார ஆபீஸ்காரர்கள் ஏற்றுக்கொள்வார்களென்றும், இந்த யோசனையை விரும்பும் பாடசாலை மானேஜர்களும், தலைமை உபாத்தியாயர்களும் தமக்கு நேரில் அறிவிக்கவேண்டுமென்றும் ஸ்ரீமான் ஸி. இராஜகோபாலாச்சாரியார் பத்திரிகைகளுக்குஒருவிண்ணப்பமெழுதியனுப்பியிருக்கிறார்.

இது காறும் பஞ்சாப் மாகாணத்தில் உலாவக் கூடாதென்று தடுக்கப்பட்டிருந்த அலகபாத்தில் வெளியாகும் இண்டிபெண்டெண்ட் பத்திரிகை மீதிருந்த உத்தரவு இம்மாதம் தேதி முதல் நீக்கப்பட்டு விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

வருகிற ஆகஸ்டு மாதம் ஆந்திர தேசத்திலுள்ள பர்ஹாம்பூரில் கூடும் விசேஷ காங்கிரஸுக்கு லாலாலஜபதிராய் அக்கிராசனராகத் தெரிந்தெடுக்கப்படக் கூடாதென்றும் அவர் டிஸம்பர் மீ நாகப்பூரில் கூடும் காங்கிரஸுக்கு அக்கிராசனராகத் தெரிந்தெடுக்கப் படுவதற்குச் சாதகங்களிருக்கின்றனவென்றும் விசேஷ காங்கிரஸுக்கு அக்கிராசனம் வகிப்பவர் எந்தக் கட்சியிலும் சேராமலிருப்பவராயிருக்க வேண்டுமென்றும் நாகப்பூரில் வெளியாகும் "மகாராஷ்டிரா" பத்திரிகை அறிவிக்கிறது.

சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் டில்லியில் த்தியாககிரகம் சம்பந்தமாக நடந்த குழப்பத்தில் சொத்து நஷ்டமுண்டாகியது. அதிகப்போலீஸ் காவலும் ஏற்படுத்தப்பட்டது. இதற்கான செலவையும் ஏற்பட்ட நஷ்டத்தையும் ஜனங்களிடம் வசூலிக்க டில்லி மாஜிஸ்ட்ரேட் முயற்சி செய்து வருவதாகவும் அத்தொகை சுமார் லட்சத்து நாற்பதினாயிரம் ரூபாயாகுமென்றும் தெரிகிறது.

கவர்ன்மெண்டாருடன் ஒத்துழைக்கக் கூடாதென்று சொல்லுவோர்கள் இளவரசரை வரவேற்கக்கூடாதென்று தீர்மானித்தால் அது தற்கொலை புரிந்து கொள்வதாகுமென்றும் இளவரசர் ஒரு கட்சியிலும் சம்பந்தப்படாதவரென்றும் எச்சரிக்கை செய்து "பம்பாய் கிரானிகில்" பத்திரிகைக்கு மி-ர். பாப்டிஸ்டா ஒரு நிருபம் எழுதியிருக்கிறார்.

1919ம் வருஷத்தில் சென்னை, கள்ளிக்கோட்டை, விசாகப்பட்டிணம் முதலிய இடங்களிலிருக்கும் பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளில் 297 பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டார்கள். இவர்களில் 45 பேர் கைதிகளாகும்.

மெகாலே கனவான் கல்வியபிவிருத்திக்குச் செய்தவேலை.

(முதல் பிரதியின் 12-வது பக்கத்தொடர்ச்சி)

மிஸ்டர் மெக்காலே என்னும் கனவான் லா... வில்லியம் பெண்டிங்கு என்னும் கவர்னர் ...னரல் (1828 முதல் 1835 வரை) இந்தியாவில் ...ட்சி செய்தபோது 1834ஷுல் கவர்ன்மெண்டு ...ர்வாக சபை மெம்பராய் இருந்தார்.

1813ஷு ஈஸ்டு இந்தியா கம்பெனியார்க்கு ...மைதங்கிய இங்கிலாந்து அரசாளித்த சார் ஆக்ட்படிக்கு ஜார்ஜ் II—LIII சட்டம் :—

"இந்தியாவின் ஆலோசனை சபையிலுள்ள ...ர்னர்ஜெனரல் இந்தியாவில் வழங்கும் பாஷையின் எழுச்சிக்காகவும் அபிவிருத்திக்காகவும், ...ப்பில் தேர்ந்த இந்தியர்களுக்கு ஊக்கமூட்ட ... இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நிலைபெறும் ...தானங்களில் ஸயன்ஸ் ஞானத்தை புகவிடவும் ...விருத்திசெய்யவும், ஒரு லக்ஷம் ரூபாய் செ...ட உத்திரவுபெற்றார்" (போர்டுலெண்ட் ஜா... கெஜட் Part I ௪. 194-ம் பக்கம் பார்க்க ...-3—1904.)

இங்கே காட்டியிருக்கும் விஷயத்தை எல்லாரும் நன்கு கவனிக்கவேண்டும். இது தான் பார்லிமெண்டு அறிந்து முதல முதல் கல்வி அபிவிருத்திக்குச் செலவுசெய்துகொள்ள விதைபோட்டதென்று சொல்லலாம் இந்த உத்தரவின் நோக்கம் என்ன? இந்திய பாஷைகளைப்பற்றியதா? ஆங்கில பாஷையைப்பற்றியதா? என்று சந்தேகம் உண்டாகலாம, அதற்கு இந்தச் சட்டத்தின் சம்பந்தமாய் 1814-ல் கனம் கோர்ட் ஆப்டைரக்டார் அனுப்பிய வியாக்கியானத்தை நாம் கவனிக்கவேண்டியதாகும். அவர்கள், "ஸயன்ஸ்" என்பது "கீழ்நாட்டு சாஸ்திரங்கள்தான்" என்னும் "அதாவது சட்டங்களும், ஒவ்வொரு ஜாதியாரும் தம்தம் அனுஷ்டாத்தில் வைத்திருக்கும் ஆசாரங்களின் சக்கிரகங்களும்" சேர்ந்த சமஸ்கிருத பாஷையில் எழுதிவைத்திருக்கும் தருமமுறைதான் என்றும்; மேலும் "இந்தியர்களுக்கும் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கும் இது விஷயமாய் அபிப்பிராய ஒத்துமை ஏற்படுத்த முக்கியமாய் உதவும் அநேக விஷயங்களும்" என்றும் விவரித்திருக்கிறார்கள். ஆனால் 1814 முதல் 1819 வரை நடந்த அநேக யுத்தங்களால் மேலே காட்டிய நோக்கம் உடனே அமுலில் வர தடைப்பட்டது. அன்றியும் மேலே சொன்ன சார்டர் ஆக்ட்டுபடிக்கு இந்தியக் கல்வியபிவிருத்தியைப்பற்றி பரிசீலனை செய்து வருஷந்தோறும் தமக்கு ஒரு யாதாஸ்து அனுப்பவும் உத்திரவிட்டிருந்தார்கள். அதற்கிணங்க 1823ல் ஆக்டிங் கவர்னர ஜெனரலாயிருந்த Mr. ஆடம் ஒரு பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் கமிட்டியை ஏற்படுத்தினார். வங்காள ராஜதானியில் இங்கிலீஷ் பாஷை மூலமாய் படிப்பு பரவிக்கொண்டு வந்தது. கல்கத்தாவில் 1817 ஷுத்தில் "வித்யாலயம்" என்றும் இந்து காலேஜில் இங்கிலீஷ் படிப்பு விருத்தியடைந்து வந்தது. ஜனங்களுக்குக் கம்பெனியாரிடம் உத்தியோகம் வகிக்க சமயம் கிடைத்து வந்ததால் அவர்கள் வெகு ஊக்கத்துடன் இங்கிலீஷ் பாஷையைக் கற்றுவந்தார்கள். 1831 ஷுத்தில் ஷெ கமிட்டியாரின் வருஷ சந்தா போர்ட்டில் இந்த விஷயத்தை நாம் பார்க்கலாம்.

1830 ஷுத்தில் செப்டம்பர் மீ 29உ கோர்ட் ஆப் டைரக்டர் கவர்னர் ஜனரலுக்குப் பின் வரும் உத்தரவை அனுப்பினார்கள். '(இந்தியாவில் அரசாங்க முறை வேலை சரிவர நடத்துவதற்காக உயர்ந்த உத்தியோகங்களை வகிக்கலாயிக்குள்ளவர்களைத் தயார் செய்வதாகிய) நமது முக்கிய நோக்கம் நிறை வேறும் நிமித்தம், அவர்கள் ஐரோப்பிய நாகரீகத்திற்கு உற்ற அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் மனத்தில் வாங்கிக்கொண்டு, ஐரோப்பிய பாஷை சாஸ்திரம் முதலியவைகளில் பூர்ண பிரியம் அடைவதுடன் ஐரோப்பிய சட்டம் நியாயம் நீதி இந்த இலாக்காக்களில் உள்ள மேலான அபிப்பிராயங்களை அடைவது தான் முக்கியமாய்க் கருதுகிறோம். நீங்களும் இதையே இந்திய கல்வியபிவிருத்தியின் முக்கிய நோக்கமாய்க்கொள்ள வேண்டுகிறோம்."

"இப்படிக்கு இங்கிலீஷ் பாஷையை போதிக்கவும் அதன் மூலமாய் ஐரோப்பிய ஸ்யன்ஸ் படிப்பு விருத்தியாகவும் தாங்கள் குறித்திருக்கும் ஏற்பாடுகளை நாங்கள் ஆமோதித்தபோதிலும், உங்களுக்கு நாம் ஒரு எச்சரிக்கை செய்யவேண்டியிருக்கிறது. அதாவது ஜெனரல் கமிட்டியாரும் டில்லி கமிட்டியாரும் சொல்லும் விஷயங்களில் எல்லாம் இந்தியர்களுக்கு அவர்களுடைய பாஷைகளிலேயே எழுதிய புஸ்தகங்களைக் கொண்டும் வாய்மொழியாகவும் கல்வி போதிப்பதின் அவசியத்தை நீங்கள் குறைத்துப் பேசுவதாய் ஜாடை காண்கிறது. அதை நாம் முற்றும் ஆக்ஷேபிக்கிறோம். இங்கிலீஷ் பாஷை மூலமாய் போதிக்கும் பூரண கல்வி இந்தியர்களில் சிலருக்குத்தான் கைகூடுவது சாத்தியம். ஆகவே அப்பேர்ப்பட்ட மேதாவிகளின் மூலமாக அசாவது அவர்கள் காலேஜிலும் பள்ளிக்கூடங்களிலும் உபாத்தியாயர்களாய் அமர்வதாலும் இந்திய பாஷைகளில் புஸ்தகங்கள் எழுதுவதாலும் அல்லது புஸ்தகங்களை மொழிபெயர்த்தலாலும் அவர்கள் பெற்ற மேலான ஞானத்தைத் தம் நாட்டில் பரவச்செய்ய வழி உண்டு. இப்படிச் செய்து இந்திய பாஷைகளையும் நாட்டாரையும் மேலான நிலைக்கு கொண்டுவரும்படி செய்யலாம். இவ்விதமான வேலையை ஊக்கமாய் செய்யும் ஒவ்வோர் இந்தியனையும் நீங்கள் கௌரவிப்பதாகப் பெரும்விளம்பரம்செய்யவேண்டும். அதற்கு வேண்டிய பண ஒத்தாசையோ வேறு எவ்விதமான ஒத்தாசையோ செய்யப்படும் என்று பிரசுரிக்கவும் வேண்டும். பிரிடிஷ் கவர்ன்மெண்டாருக்குச் செய்யும் எவ்வித ஊழியத்தைக் காட்டிலும் இந்தக் கணியமே மேலானதாய்க் கருதப்படும் என்று பஹிரங்கப்படுத்தவும் வேண்டும்."

சென்னைக்கவர்ன்மெண்டுக்கும் ஓர் உத்தரவு அதே தேயிட்டுவந்தது. அதுவும் இதே அபிப்பிராயத்தை மேற்கொண்டதுதான். ஆனால் கவர்னர ஜெனரல் மேலான அதிகாரம் வகித்து வந்ததால் வங்காளத்தில் நடந்த விஷயத்தைத்தான் நாம் நன்ருய் கவனிக்கவேண்டும். ஷெ அ... கமிட்டியில் 1820-ஷு முதல் 1834 வரை ஆங்கிலேயரில் ஒருவகுப்பார் ஸமஸ்கிருதமும் அரபிய பாஷையும் தான் கல்வியபிவிருத்தியில் உபயோகிக்கும் முக்கியமான பாஷைகளாய் இருக்கவேண்டு... என்று கருதினார்கள். இன்னொரு வகுப்பா... இந்தியாவில் இங்கிலீஷ் பாஷை மூலமாய்த்தா... கல்வி பரவவேண்டுமென்றார்கள். இவ்வித வி...காரம் நாலு வருஷம் நடைபெற்றது. 1834-ஷு இறுதியில் மிஸ்டர்மெக்காலே இந்தியாவுக்குக் கவர்னர்ஜெனரல் நிர்வாகசபை மெம்பராய்வந்தா... அவரை 1835ஷு பப்ளிக் இன்ஸ்டாக்ஷன் கமிட்டி மெம்பராகவும் அதற்கு அக்கிராசனம் வகிக்கவும் நியமித்தார்கள். இவரைத்தவிர அதில்இருந்த 10 மெம்பர்களின் பெயர் பினவருமாறு :—

அக்கிராசனர் மிஸ்டர் கனம் மேக்காலே.

இங்கிலீஷ் பாஷை கட்சியார்.

1. Mr. பர்டு.
2. ,, லாண்டர்ஸ்.
3. ,, பிஷ்பி.
4. ,, டிவெலியன்.
5. ,, கால்வின்.

இந்தியபாஷை கட்சியார்.

1. Mr. ஷேக்ஸ்பியர்.
2. ,, செடிப்ரின்ஸ்ப்.
3. ,, ஜேப்ரின்ஸப்.
4. ,, மக்னடன்.
5. ,, ஸதர்லண்டு (காரியதரிசி.)

இவ்விரு கட்சியாருக்கும் நடந்த விவாதத்தை யாதாஸ்து மூலமாய் கவர்னர் ஜெனரலுக்கு அ...ப்பினார்கள். அந்த ...ருகாத்தாருடன் தாம் சே... முடியாதென்று Mr. மெக்காலே பிடிவாதமாய் நின்றார். இரு கக்ஷியாரும் தங்கள் அபிப்பிராயங்களை எழுதி வற்புறுத்தினார்கள். அவர்களுடைய எழுத்து மூலவிவகாரம் தாம் நிர்வாக உத்தியோகமுறையில் அவரிடமே தீர்மானிக்கும் வரும்படி நேர்ந்தது. தாம் இருகட்சியாருடைய வண்த்தையும் சீர் தூக்கிப்பார்த்து 1835-ஷு பிப்ரவரி மீ 2உ யிட்டதம்முடைடைய் அபிப்பிராயத்தை தனியத்துபந்தமாய் எழுதியனுப்பினார்.

(இன்னும் வரும்.)

போதகாசிரியர்.

26வது

சென்னை மாகாண மகா நாடு

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்காரின் அக்கிராசனப் பிரசங்கம்.

(சென்றவாரம் தொடர்ச்சி.)

சீர்திருத்த சட்டத்திலும் விதிகளிலும் என்ன குறைகளிருந்த போதிலும் காங்கிரஸ் காரர்கள் மாத்திரம் இச்சட்டத்தை ஏற்று வேலை செய்யாவிடில் இதுவும் மிண்டோ மார்லி சட்டத்தைப் போலவே முடியும். பழைய ராஜீயக் கொள்கையை யுடையவர்களும் அரசாங்க உத்தியோகஸ்தரும் ஒத்துப்போனால் அரசர் பெருமான் நமக்கு அளிக்க விரும்பிய புதுத்திருத்தங்களில் முழுப்பலனும் நமக்குக் கிடைக்காமற் போய்விடும்.

மிதவாதிகளை ஒன்று கூட்டி மிதவாதத்தைப் போதிக்க மிஸ்டர் மாண்டேகுவும் இந்திய கவர்ன்மெண்டுகளும் முயற்சித்ததில் ஒரு பெருத்த தவறிழைத்து விட்டார்களென்பதே எனதபிப்பிராயம். மிஸஸ் பெஸண்டின் நோக்கமும அவர்களின் நோக்கமேயானால் அவரும் ஒரு பெரிய தவறிழைத்துக் கொண்டு வருகிறாரென்றே நான் சொல்லுவேன். எல்லா விஷயங்களிலும் அமிதவாதத்தைக் கொள்ளும் இந்தியர் வெகு சிலரே. நமது மதமும் நம்முடைய நாகரீகமும் நியாய வழியைத் தவிர வேறு வழியை அநுஷ்டிப்பதற்கு இடங் கொடுக்காது. முரட்டுத்தனமும், குற்றமிழைப்பதும் புரட்சி செய்யப் பார்ப்பதும் நம்முடைய குணங்களல்ல. நமக்கும் அவைகளுக்கும் வெகுதூரம் ஆகவே கவர்ன்மெண்டாராவது மற்ற எவராவது மிதவாதிகளை ஒன்று சேர்த்து மிதவாதத்தைப்போதிக்கவேண்டியது அனாவசியம். அதைவிட்டு அக் காரியத்தில் அவர்கள் தலையிடுவார்களானால் தங்கள் காரியத்தையே கெடுத்துக்கொள்வது நிச்சயம்.

ராஜீயக் கட்சிகளை உத்தியோக தோரணையில் ஒன்றுபடுத்த முயற்சிப்பதோ அல்லது உத்தியோக முறையில் ஒரு கட்சியாருக்கு தாட்சண்யம் காட்டுவதோ பொது ஜனங்களுக்கு வருத்தத்தை உண்டுபண்ணுவதோடு, முன்னைவிட ஜனங்கள் அதிகமாக ஜன நாயக ஆட்சி முறையை விரும்புவதற்கும் இடங்கொடுக்கும், இந்தியாவில் எந்த கவர்ன்மெண்டாரும் தங்கள் கட்சிக்குச் சாதகமாக ஜனங்களுக்கு ராஜீய விஷயங்களைக் கற்பித்து தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியாது. சீர்திருத்த சட்டத்தின்படி பொது ஜனங்கள் தங்களாகவே ராஜீய விஷயங்களைக் கற்றுக்கொள்ள வசதிகள் ஏற்படுத்தாவிடில் ஜன நாயக ஆட்சிக்கு அடிப்படையெனச் சொல்லும் இச் சட்டம பயனற்றதாய்ப் போய்விடும். ஜன நாயகக் கொள்கையை அங்கீகரிக்கும் இந்தியர்களும் சங்கங்களும் ஜனத் தலைவர்களும் இல்லாமற் போனாலும் சீர்திருத்தசட்டம் பிரயோஜனத்தைதாராது.

நமது எண்ணங்களை தாராளமாய்வெளியிடும் சுதந்தரமும் சுயேச்சையுமே உத்தியோகஸ்தர்களின் கீழடங்கிய ஒரு மந்திரியைவிட மேலானது. மந்திரியாக விரும்போர் அந்த ஸ்தானத்தை வகிப்பதற்கேற்ற சக்தியை யடைவதற்குக் காங்கிரஸ் கட்சியார் உதவி செய்யாவிடில் சீர்திருத்தச் சட்டம் தவறிவிடும்.

ஆகவே நீங்கள் உண்மையான காங்கிரஸ்காரர்களாயிருக்கும் பட்சத்தில், இக்காலத்தில் காங்கிரஸின் மேன்மையை நிலைநிறுத்துவதற்கு உதவியாயிருக்கும் சுயேச்சை உணர்ச்சியை எங்கும் பரப்ப முயற்சி செய்யவேண்டும். காங்கிரஸ் மகாசபையே எல்லோராலும் விரும்பப்படுவது. ஜனங்களின் பிரதிநிதி சபையும் அதுவே. அதுமிக்க செல்வாக்குடையது. இந்தியா முழுவதிற்கும் பொதுவாகவுள்ள ராஜீய சங்கமும் அதுதான். நாம் தற்போது அடைந்திருக்கும் நிலைமைக்குக் காரணம் அந்த காங்கிரஸ் மகா சபையே. இனி அச்சபையின் மூலமாய்த்தான் ராஜீய விஷயங்களிலும் அபிவிருத்தியடையக்கூடும். தற்சமயம் இந்தியருக்குள் ஒரு ராஜீயக் கட்சிக்கு மேலிருப்பதற்கு இடமில்லை. ஆகவே எல்லா தேச பக்தியுள்ள இந்தியரும் ஒன்றுசேர்ந்து காங்கிரஸ் மகா சபையை தலைமையைக் கொண்டு முன்னேற்றமடைய முயலவேண்டும். அப்பொழுது தான் சீர்திருத்தங்களினின்றும் அரிய பலன்களை அடைவதற்கும் ஹேதுவாயிருக்கும். இக்காலத்தில் நமக்குள் கட்சி பேதமின்றி ஒற்றுமையாகவிருக்கவேண்டு மென்று நான் மறுபடியும் சொல்லவேண்டிய அவசியமேயில்லை. நாம் யாவரும் காங்கிரஸ் கட்சிக்காரராக விருந்தால் அபிப்பிராய பேதங்கள் ஏற்படாது. காங்கிரஸைவிட்டு விலகி நிற்பவர்கள் எப்படி ஒரு ராஜீய ஜன நாயக ஆட்சி முறையை அமைக்கக்கூடும்? அதோடு கலவாமலிருந்து அதை ஆள்முயற்சி செய்வது எப்படி? அதை முன்னின்று நடத்த முயற்சிக்காதவர்கள் உண்மையில் நாட்டை ஆள் எவ்வாறு நினைக்கலாம்.

அதிகார வர்க்கத்தினரோடு ஒத்துழைப்பதையே தங்கள் உத்தேச வேலையாகக் கொண்டுள்ளவர்களை உண்மையான காங்கிரஸ் காரர்களெனச் சொல்லக்கூடுமோ? சீர்திருத்தச் சட்டத்தினால் உண்டாகக்கூடிய எல்லா பலன்களையும் பெறும்படி அச்சட்டத்தை வேலை செய்யவும் அருகர்களாவார்களா?

காங்கிரஸ் காரர்களுக்கு உத்தியோகஸ்தர்களிடமாவது கவர்ன்மெண்டாரிடமாவது வெறுப்பென்பது கிடையாது. இந்தியாவிலுள்ள எல்லா வகுப்பாருக்கும் சமத்துவமும் சரியானபடி நியாயமும் வழங்கவேண்டுமென்பதே காங்கிரஸின் முக்கிய கோரிக்கை. சமத்துவமாக நடத்தப்பட்டபோதும் தங்களை விடத் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணமில்லாமல் நடத்தப்பட்ட போதும் காங்கிரஸ் கட்சியாரும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரோடு கலந்துழைக்கத் தயாராயிருக்கின்றனர். கூடிய வரையில் அவர்களின் கோரிக்கைகளுக்கும் காது கொடுக்கவேண்டியது அவசியம்.

வோட்டர்களுக்கு ராஜீய அறிவை ஊட்டும் வேலையை முதன்மையாகக் கொள்ளவேண்டும். அதைச்சரிவரச் செய்து முடிக்கவேண்டும். அவ்வேலையும் சற்றளவுநடந்தே வருகின்றது. கிராமாந்தரங்களிலுள்ளவர்களும் பல விஷயங்களை நன்றாய் அறிந்திருக்கின்றார்களென்றே நினைக்கின்றேன். நம்மவர்கள் தற்சமயம் தலைவர்களின் விஷயமாயும் நம்மியக்க விஷயமாயும் கொண்டிருக்கும் மதிப்பு சிறந்தாயிருக்கின்றமையால் இனி நமக்கு நற்காலம் பிறக்குமென எதிர்பார்க்க இடமிருக்கின்றது. சாமர்த்தியமும் விடாமுயற்சியும் ஒருங்கே யமையப்பெற்ற காங்கிரஸ் கட்சியார் பலர் ஜனங்களுக்கு ராஜீய அறிவைப் புகட்டும் வேலையில் தலையிட்டு அதை மிக்க ஜெயத்துடன் நடத்தி வருவதாகத் தெரிகின்றது. ஆயினும் இன்னும் செய்யவேண்டிய வேலைகள் பலவுள் வேலைசெய்ய இன்னும் அநேகர் தயாராகவுமிருக்கவேண்டும். காங்கிரஸ கட்சியாரின் சங்கம் ஒவ்வொரு கிராமங்களிலும் பட்டணங்களிலும் இருக்கவேண்டும். அங்கங்கிருக்கும் பெரிய மனிதர்களை சமரஸப்படுத்தவேண்டும். வேலையை நமக்குள்ளாகவே நாம் பங்கிட்டுக் கொள்ளவேண்டும். காங்கிரஸ் கட்சியார் எங்கும் ஆதிக்கம் செலுத்தவேண்டும்.

காங்கிரஸ் தலைவர்களும் காங்கிரஸ்கட்சியைச்சேர்ந்த பத்திராதிபர்களுமிருப்பது போல் காங்கிரஸ் கட்சிக்குச் செலவுசெய்பவர்களும் காங்கிரஸ் நிபுணர்களுமிருக்கவேண்டும். சென்னையில் ராஜீய ஆலோசனை சபைகளிருக்கவேண்டும். சென்ற காங்கிரஸிற்கும், அதற்கு முன் நடந்த காங்கிரஸ்களுக்கும் ஆன செலவுபோக மீதியிருப்பதைகொண்டு ஒருபெரிய காங்கிரஸ்மண்டபம் கட்டவேண்டும். உண்மையான காங்கிரஸ்காரர்கள் பலரை சட்டசபைக்குத் தெரிந்தனுப்பும்படி நான் வோட்டர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஒவ்வொரு தேசாபிமானியும் இதை கவனிக்கவேண்டும்.

ஜனநாயக ஆட்சி முறையை அநுசரித்து பிராமணரல்லாதாரியக்கத்தைப் பிராம்மண நண்பர்களும் ஆதரிக்கவேண்டுமென நான் வேண்டிக்கொள்ளுகின்றேன். பிராம்மணநண்பர்கள் அவ்வியக்கத்தைவிட்டு விலகி நிற்றல்கூடாது. பிராமணரல்லாதார் தங்களிடத்தில் நம்பிக்கை கொள்ளும்படி பிராம்மணர்கள் செய்து கொள்ளவேண்டும். பிராம்மணரை விட ஒரு வழியிலும் தாழ்ந்தவர்களல்லாத பிராம்மணரல்லாதாரும் காங்கிரஸின் கொள்கைகளை அநுசரித்து நடப்பதைத் தங்கள் கடமையாகக்

கொள்ளவேண்டும். அநேகமாய்ப் பிராம்மணரல்லாதாரில் எவரும் காங்கிரஸின் கோரிக்கைகளையும் அதன் உத்தேச வேலைகளையும் அங்கிகரிக்காமலிருக்கமாட்டார்களென்றே நினைக்கின்றேன்.

எப்படி ஹிந்துக்கள் முஸ்லீம்களை அவர்களின் ஜாதி உரிமையை விட்டுவிடச் சொல்லவில்லையோ அவ்வாறே பிராம்மணரும் பிராம்மணரல்லாதாரின் ஜாதி உரிமையை விட்டுவிட ஒருக்காலும் சொல்லமாட்டார்களென்றே நம்புகின்றேன். முகம்மதியர்கள் ஹிந்துக்களோடு ஒத்துப்போவதைப்போலவே பிராம்மணரல்லாதாரும் பிராமணர்களோடு ஒத்துப்போகவேண்டும். பலர் அவ்வாறு நடந்து வருவதாகவே நான் அபிப்பிராயப்படுகின்றேன். ஹிந்துக்களில் எல்லா வகுப்பாரும் முஸ்லீம்களும்ஒவ்வொரு மாகாணத்தில் காங்கிரஸ் மகா சபையின் அங்கத்தினர்களாயிருக்கின்றனர் இம்மாகாணத்திற்குமாத்திரம் வேறுவழியாகுமா? ஒருக்காலுமில்லை.

சட்ட சபையில் சில ஸ்தானங்களைப் பிராம்மணர்களுக்கெனவும் அதிகமான ஸ்தானங்களை பிராம்மணரல்லாதாருக்கெனவும் ஒதுக்கிவைத்துவிட்டு மற்ற ஸ்தானங்களைப் பொதுவாகச் செய்துவிட்டிருந்தால் நலமாயிருந்திருக்குமென்றே நான் நினைக்கின்றேன். அவசியமுள்ளவிடத்தில் இரு வகுப்பாரும் சட்ட சபை ஸ்தானங்களை சரிப்படுத்திக்கொடுக்க முயற்சிசெய்ய வேண்டுவதும் அவசியமே.

சட்ட சபையில் ஸ்தானம்பெற அபேக்ஷகராய் நிற்கும் பிராம்மணர்களும் பிராம்மணரல்லாதாரும் வோட்டர்களும் ஒற்றுமையுடனுழைத்து தேசிய அபிவிருத்தியின் சரித்திரத்திலே ஒரு சகாப்தத்தை உண்டுபண்ணவேண்டும். இனி கட்சி பேதமென்பது மறைந்து, எலெக்ஷன் கூச்சலுமடங்கி பிராம்மணரும் பிராம்மணரல்லாதாரும் ஒன்று சேர்ந்து ஜன நாயக ஆட்சி முறையின் மேன்மை கூடிய, சீக்கிரத்தில் வெளிப்படுமென நான் நினைக்கின்றேன.

பஞ்சாப் பெருவதை.

அடுத்தாப்போல் யோசிக்க வேண்டியவைகளில் முக்கியமானது பஞ்சாபில் ராணுவ அமுல் நடத்திய விஷயமும் ஹண்டர் கமிட்டியாதாஸ்தும் அது சம்பந்தமாய் இந்தியா மந்திரியும் இந்தியா கவர்ன்மெண்டாரும் வெளியிட்டுள்ள அறிக்கைகளுமேயாகும்.

பஞ்சாபில் ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது நியாயமாவென முதலில் விசாரிப்போம். இந்தியா மந்திரி தம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அது நியாமேயென ஒப்புக்கொண்டிருந்தாலும் அது ஒருக்காலும் நியாயமாகாதென்றே நாம் சொல்ல வேண்டியிருக்கின்றது.

யுத்தத்திற்குச் சமானமான பெரிய கலகமோ அல்லது யுத்தமோ நேரிட்ட காலத்தில்தான் ராணுவச் சட்டத்தை அமுலுக்குக்கொண்டுவர வேண்டும். நிலைமை எவ்வளவு கேவலமாயிருந்தாலும் அச்சட்டத்தைப் பிர்யோகப்படுத்தக்கூடாதென திட்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதோடு எந்தக் கலவரத்தை முன்னிட்டு ராணுவச் சட்டம் பிரயோகிக்கப்பட்டதோ அக்கலவரம் அடங்கியவுடன் ராணுவச் சட்டத்தை அமுலில் வைத்திருக்கக்கூடாதென்றும் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றது. ராணுவச் சட்டம், அவசியம் ஏற்பட்டபோது தோன்றி அவசியம் முடிந்தவுடன் நீங்குவதே நியாயம்.

1804-ம் வருஷத்திய ராஜாங்க குற்ற சட்டப்படி பஞ்சாபில் ராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அச்சட்டத்தில், பகிரங்கமான கலகம் ஏற்பட்டபோது கவர்னர் ஜெனரலுக்கு ராணுவச் சட்டத்தைப் பிரயோகிக்க அதிகாரமுண்டு என்று சொல்லப்பட்டிருக்கின்றது. பஞ்சாபில் குழப்பம் விளைத்த ஜனங்கள் கத்தி முதலிய ஆயுதங்களைத் தாங்கி வந்ததாகத் தெரியவில்லை. ஆயுதங்களை எடுத்துக்கொள்ளவேண்டுமென அவர்கள் முயற்சி செய்ததாகவும் தெரியவில்லை. குழப்ப ஆரம்பத்தில் அவர்கள் தடிகளையும் லத்திகளையும் கூடகொண்டுவரவில்லை. பிரஸ்தாப குழப்பங்களுககும் கிராமாந்தரங்களுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. அதோடு ஹண்டர் கமிட்டியார் ஏக மனதாய் அபிப்பிராயப்படுவதற்கேற்ப பஞ்சாபில் குழப்பம் உண்டாக்க சதியாலோசனை செய்யப்படவுமில்லை. கவர்ன்மெண்டைக் கவிழ்த்துவிட ஜனங்கள் முயற்சிசெய்யவுமில்லை. அமிர்தாஸ் டிப்டி கமிஷனரும் அமிர்தரஸிலுள்ள எந்த வகுப்பாரும் ஐரோப்பியருக்கு விரோதமாகவும் முரட்டுத்தனத்தால் கவர்ன்மெண்டைக் கவிழ்த்துவிடவும் முயற்சிசெய்யவில்லை யென ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால் ஸர்மைக்கேல் ஓட்வியர் மாத்திரம் தாம் நிரூபிக்கமுடியாமற்போனாலும் சதியாலோசனையிருந்ததாகவே கற்பிக்கின்றார். அவர் ஹண்டர் கமிட்டியின் முன் சாக்ஷியம் கொடுத்திருக்கும் பான்மையின்றும், அவர் இந்தியாவில் எந்த மகாணத்தையும் ஆளச்சக்திபற்றவரென்பதும் சாதாரண நியாயமும் அவருக்குத் தெரியவில்லையென்பதும் நன்ருய் விளங்குகின்றது. ஏப்ரல் மாதம் 15ந் தேதியிலிருந்து 24-ந் தேதி வரை பஞ்சாபில் ராணுவச் சட்டம் அமுலிலிருந்தது. அக்காலத்தில் நாட்டில் குழப்பமென்பதே கிடையாது. கலகமெல்லாம் அடங்கிவிட்டது. ஏப்ரல் 10-ந் தேதி அமிர்தசரஸில் நடந்த சம்பவத்திற்குப் பிறகு யாதொரு கலகமும் நிகழவில்லை. 13-ந் தேதி யன்று இரக்கமின்றி ஜனங்களைச் சுட்ட பின்னும் 14-ந் தேதி யன்றும் ஒரு குழப்பமும் ஏற்படவில்லை. ராணுவச் சட்டம் அமுலுக்கு வந்த காலத்திலும் பல விடங்களில் அமைதியும் அடக்கமும் நிலவியிருந்ததாக மைனரிட்டி ரிபோர்ட்டில் சொல்லப்பட்டிருக்கின்றது. கலகத்தை அடக்குவதற்காக ராணுவச்சட்டம் பிரயோகிக்கப்படவில்லையென்றும், கலகம் வேறு இடங்களில் பரவாமல் தடுப்பதற்கே பிரயோகிக்கப்பட்டதென்றும் லாகூர் கமிஷனர் ஹண்டர் கமிட்டி முன் சாக்ஷியங் கொடுத்திருக்கின்றார். பஞ்சாப் கவர்ன்மெண்டின் முக்கிய காரியதரிசியும் இவ்வாறே அபிப்பிராயப்பட்டிருக்கின்றார். ஆகவே இதினின்றும், கலகத்தை அடக்குவதற்கு ராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை யென்றும் கலகத்தைப் பரவவொட்டாமல் தடுப்பதற்கும் இச் சட்டம் அமுலுக்குவருமுன் ஜனங்கள் அளவுக்கு மீறி நடந்து கொண்டதை தண்டிக்கவுமே ராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதென்றும் விளங்குகின்றது. கடைசியாக, நாட்டில் கலகங்கள் எல்லாம் அடங்கி. அமைதி நிலவியிருந்த காலத்திலும் ராணுவச் சட்டம் அமுலிலேயே வைக்கப்பட்டிருந்தது. விஷயவிவரங்கள் இவ்வாறிருக்க, இந்தியா மந்திரியும் இந்தியா கவர்ன்மெண்டின் அங்கத்தினர்களும் ராணுவச் சட்டத்தை அமுலுக்குக்கொண்டுவந்ததையும். அதை நீடிக்க வைத்திருந்ததையும் அங்கீகரித்திருப்பது ஆச்சரியத்தையே விளைவிக்கின்றது. அவர்கள் அங்கீகரித்திருபபதற்குக் காரணமின்னதென்றும் குறிப்பிடப்படவில்லை. எல்லாவற்றையும் அக்கரையுள்ள ஜனங்களே யூகித்து அறிந்துகொள்ளும்படி விட்டிருக்கின்றனர். ராணுவச்சட்ட அமுலைப்பற்றி இந்தியா அங்கத்தினர்கள் எப்படி ஒரே வித அபிப்பிராயப்பட்டனரோ அவ்வாறே ஆங்கில அங்கத்தினரும் ஒரேவிதமாக அபிப்பிராயபட்டிருக்கின்றனர். இது நிற்க ராணுவச் சட்டத்தின்பெயரை வைத்துக்கொண்டு நாகரிகமுள்ள கவர்ன்மெண்டிற்கும் கிறிஸ்தவ தர்மத்திற்கும் பொருந்தாதபடி அளவுகடந்து அதிகாரிகள் நடவடிக்கைகள் நடத்தியதைக்கண்டு இந்தியாவிலுள்ள ஒரு ஆங்கிலேயரும் ஆத்திரம் கொள்ளாததை நோக்கவே வருத்தம் அதிகமாகின்றது. "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையும் இன்னும் சில ஆங்கிலேயரும் அதிகாரிகளின் நடவடிக்கைகளை அங்கீகரிக்கவில்லையாயினும் பெரும்பாலரான ஆங்கிலேயரின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக நடந்துகொள்ள அவர்களுக்கு சக்தியில்லை. இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேய பத்திரிகைகளும் இந்தியாவிலுள்ள ஆங்கிலேய பத்திரிகைகளும் மிக்க இரக்கத்தைக் காட்டவேண்டிய இவ்விஷயத்தில் ஜாதி வேற்றுமையையாவது ராஜீய விஷயத்தையாவது பாராட்டக்கூடாது. நாம் சந்தோஷமாயிருக்கும் காலத்திலும் ராணுவச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட சில விசித்திரமான தண்டனைகளை நினைத்துக்கொண்டால் அடங்காத ஆத்திரம் பொங்குகின்றது. இவைகளை முதலாவதாகவிருப்பது வயிற்ருல் ஊர்ந்துபோகும் தண்டனை.

குற்றத்தில் சம்பந்தப்படாதவர்களுக்கும் இத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்தியர்களைத் தாழ்வாகவே நடத்தவே இத்தண்டனை புதிதாகப் பிறப்பிக்கப்பட்ட

தெனத் தெரிகின்றது இவ்விசித்திர தண்டனை சரித்திர ஆராய்ச்சி காலத்திற்குமுற்பட்ட காலத்தையே சேர்ந்தது.

• ஐரோப்பியர்களுக்கு மரியாதை செலுத்தாதற்காகவும் உத்தியோகஸ்தருக்கு ஸலாம் செய்யாததற்சாகவும் பால்விற்க மறுத்ததற்காகவும் ஜனங்கள் நடுத்தெருவில் நிறுத்தப்பட்டு சவுக்கால் அடிக்கப்பட்டனர்.

பிறகு நாம் லெப்டினண்ட் கர்னல் ஜான்ஸனின் அபார புத்தியைப்பற்றிக் கொஞ்சம கவனிக்கவேண்டியிருக்கின்றது. அவர் தான் 1000 மாணவர்களைப் பிரதி தினமும் கடுமையான வெயிலில் 15 மைல் தூரம் நடக்கச் செய்தது. ஒரு காலேஜின் மாணவர்களும் ஆசிரியர்களும் 30-மணி நேரம் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தனர். மாணவர்கள் பிரதி தினமும் 4 தடவை பேர் கொடுத்து வரும்படி செய்யபப்பட்டனர். இந்தியர்கள் வண்டியினின்று மிறங்கி ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கு ஸலாம் செய்யவேண்டியிருந்தது. கைது செய்யப்பட்டவர்கள் முகம் தரையில் படும்படி குனிந்து ஸலாம் செய்ய வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. ராணுவச் சட்ட கைதிகளுக்குக் கடுந் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்கள் வெளியிலிருக்கும் வக்கீல்களின் உதவியைப் பெறக்கூடாதென்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர் பலர் விசாரணைக்குக் கொண்டுவரப்படவேயில்லை. ஆகாய விமானங்களினின்றும் வெடிகுண்டுகள் போடப்பட்டன. கடைசியாக ஜாலியன் வாலா பாக்கில் படுகொலையும் செய்யப்பட்டது. இதில் சம்பந்தப்பட்டவர்களைச் சரியானபடி தண்டிக்கவேண்டுமென்றே நாம் வேண்டுகின்றோம். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் அபிப்பிராயத்தைக் கீழ்க்கண்டவாறு இந்தியா மந்திரி சொல்லியிருப்பது ஒன்றே நமது கோரிக்கை நியாயமானதென்று சொல்வதற்கு போதுமானது. "இந்திய வம்சத்தினரையே அவமதிக்கவும், சில சமயங்களில் அநியாயம் எனப்படும்படி அகாரணமாக அசௌகரியமுண்டுபண்ணவும், சிறப்பாக இந்திய மகாஜனங்கள் மட்டுமல்ல, நாகரீகமுள்ள உலக மகா ஜனங்கள் அனைவரும் அதிகாரிகள் இன்னபடி நியாயமாயும் கருணையுடனும் நடக்கவேண்டுமென்று கண்டிப்பாய்க் கேட்க உரிமை கொண்டிருக்க அதற்கு மாறாக தகுதியையும் கருணையையும் மீறி நடக்கவும் வேண்டுமென்ற கருத்தில்லாமற் பேரியின் அத் தகைய கருத்துக்கு இடமுண்டென்று செய்யப்படும் வண்ணம் உத்தரவுகளும் தண்டனைகளும் இருந்திருக்கின்றனவென்று புலப்படுமாறு ராணுவச்சட்ட அமுல் இருந்திருக்கிறதென்ற உறுதிமொழிக்கு ஏற்ற உதாரணங்கள் கமிட்டியாரால் எடுத்துககாட்டப்பட்டுள்ளன"

ஜெனரல் டயரின் இரக்கமற்ற செயல் இந்தியா முழுவதும் நடுங்கும்படிச் செய்ததோடு இந்தியர்களின் மனதில் ஆறாத்துயரையும் உண்டாக்கிவிட்டது. மைனாரிடி ரிபோர்ட்டில் சொல்லப்பட்டிருப்பதுபோல் ஜெனரல் டயர், இன்னது தான் செய்வதென்று யோசிப்பதற்கும் தமக்கு சாவகாசமில்லையென இப்பொழுது சொல்வதெல்லாம் வெறும் பாசாங்கே. ஜாலியன் வாலா பாக்கில் கூட்டம் கூடுமென அவருக்குத் தெரிந்தபின் 4-மணி சாவகாச மிருந்திருக்கின்றது. தம் ஜாகையினின்றும் அரைமணி நேரத்தில் ஜலியன் வாலா பாக்கிற்குச் சென்று இன்னது தான் செய்வதென திட்டமாய் மனத்தில் முடிவு செய்து கொண்டார். முரட்டுத்தனம் ஒன்றுஞ் செய்யாத நிரபராதிகளையும் ஆயுதமொன்றும் வைத்தில்லாத ஜனங்கள் பலரைச் சரியானபடி தண்டிக்க வேண்டுமென்று மிக்க சமர்த்துள்ள இந்த ஜனரல் முடிவு செய்துகொண்டார். அங்கு கூடியிருந்த ஜனங்கள் இவரை எதிர்க்கவும் முயற்சிக்கவில்லை. பலருக்குத் தாங்கள் கட்டளையை மீறி நடப்பதாகவே தெரியாது. இதனைய கூட்டத்தினர் மீது இவர் ஓயாது சுட்டார். அவர்களைக் கலைப்பதிற்காகச் சுடவில்லையாம். பஞ்சாப் முழுவதும் ஒரு நல்லொழுக்கத்தைக் கற்பிக்கவே சுட்டாராம். துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யாமலே தாம் கூட்டத்தைக் கலைத்திருக்க முடியுமென்றும் ஒப்புக்கொள்ளுகின்றார். லார்டு ஹண்டரும் அவரது நண்பர்களும் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யாமல் கூட்டத்தைக் கலைத்திருக்க முடியாது என அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். ஆனால் அச்சமயத்தில் நேரே நின்று பார்த்து காரியம் நடத்தியவரின் பேச்சையே நாம் பெரிதும் மதிக்கவேண்டும. அவசிய மேற்பட்ட காலத்தில் கூடியவரையில் குறைந்த அளவான பலத்தையே உபயோகிக்க வேண்டுமென்ற சித்தாந்தத்தை மீறி ஜெனரல் டயர் நடந்துவிட்டதாக பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சொல்லியிருக்கின்றனர். ஜெனரல் டயர் தமக்குச் சவுகரியமேற்பட்டிருந்தால் பீரங்கிகளையும் உபயோகித்திருப்பார். அவர் காயமடைந்தவர்களுக்கு வைத்திய உதவியும் செய்யவில்லை. அவர் தாம் செய்த காரியங்களைப்பற்றி சம்பவம் நடந்த சில மாதங்களுக்குப் பிறகு தாமே தெளிவாக வெளியிற் சொல்லிவிட்டார். வேறு யாரும் அவர் செய்த காரியங்களை அவ்வளவு தெளிவாய் சொல்லியிருக்கமுடியாது. அவருக்குப் புத்தி சரியாகவில்லை எனவும் சொல்லுவதற்கில்லை. அவ்வாறு இருப்பதாக அவரும் சொல்லவில்லை. பிறரும் அவருக்காகப் பரிந்து சொல்லவில்லை. மிதவாதிகளில் சிறந்தவரான மிஸ்டர் சீனிவாச சாஸ்திரியாரும், ஜெனரல் டயரை அவரது வேலையினின்றும் நீக்கிவிட்டு அதனால் சரியாக நியாயம் வழங்கிவிட்டதாகச் சொல்வது கேலிக்கிடமான நியாயமே என்று சொல்லியிருக்கின்றார்.

ஜாலியன் வாலாபாக்கில் ஜெனரல் டயர் நடந்து கொண்ட விதத்தை ஸ்ர் மைக்கேல் ஓட்வியர் அங்கீகரித்திருக்கின்றார். இது ஜெனரல் டயர் செய்த குற்றத்தை விடப் பெரிய குற்றமாகும். பலநாட்கள் வரை பஞ்சாப் கவர்ன்மெண்டார் கொல்லப்பட்டவர்களின் தொகை இவ்வளவென்பதை நிர்ணயிக்காமலேயிருந்தனர். பஞ்சாப்பில் தவறாக நிர்வாகம் நடந்ததற்கெல்லாம் ஸர் மைக்கேல் ஓட்வியர்தான் காரணம், அதற்காக ஸர் மைக்கேலைச் சரியானபடி தண்டிக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக அவர் நன்றாய் புகழப்பட்டிருக்கின்றார். இது கவர்ன்மெண்டின் குறையை வெளிப்படுத்துகின்றது. அவருக்கு விரோதமாக ஒரே ஒரு வாக்கியம்தான் செல்லப்பட்டிருக்கின்றது. அதாவது "ஸர் மைக்கேல் ஓட்வியர் விஷயத்தில் குற்றங்காணாமலிருக்க முடியவில்லை" என்பதே. இதற்காகவா நாம் அளவற்ற கஷ்டப்பட்டது? லார்டு ஹண்டரும் ஸ்காட்லாந்திலிருந்து வந்தது; லார்டு சின்ஹா நம்மைப் பொறுமையுடனிருக்கச் சொல்லுகின்றார்.

பஞ்சாப்பில் கடுமையாக நடவடிக்கை நடத்திய உத்தியோகஸ்தர்களின் விஷயத்தில் கமிட்டியின் மெஜாரிட்டி மெம்பர்கள் மிக்க கருணையுடன் நடந்துகொண்டிருக்கின்றார். லார்டு ஹண்டர் அட்டூழியங்களைப்பற்றி குறிப்பிடும்போது "துரதிருஷ்டவசமாக நடந்து விட்டது" "யோசனையின்றி நடத்தி விட்டார்கள்" என்று சொல்லியிருக்கின்றனரே தவிர வேறு மாதிரியாக ஒன்றும் சொல்லவில்லை.

சத்தியாக்கிரஹம் காரணமல்ல.

ஜனங்கள் அளவு கடந்து நடந்து கொண்டதற்கு சத்தியாக்கிரஹ இயக்கமே காரணமென்று மெஜாரிட்டி ரிப்போர்ட்டில் சொல்லியிருப்பதையும் நாம் அங்கிகரிக்க முடியாது. இவ்விஷயத்தில் இந்திய அங்கத்தினர்களின் அபிப்பிராயமும் ஆங்கிலேய அங்கத்தினர்களின் அபிப்பிராயத்தைத் தழுவியிருப்பதுபோல் காணப்பட்டாலும் அவர்கள், அந்தந்த மாகாணங்களில் கட்டுப்பாடாய் நடைபெற்று வரும் சத்தியாக்கிரஹ இயக்கந்தான் பஞ்சாப் சம்பவத்திற்குக் காரணம் எனச் சொல்லுவதற்கில்லையென்றும் அக்காலத்தில் இந்தியாவிலுள்ள ஜனங்களின் மனதில் உண்டான ஒரு புது உணர்ச்சிக்குக் காரணமெல்லாம் ரௌலட் சட்டத்தைப் பொது ஜனங்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாய் நிறைவேற்றியதே யாகுமென்றும் சொல்லியிருக்கின்றனர். இந்தியர்கள் சுயராஜ்யம் வேண்டுமென்று வற்புறுத்திக்கேட்டுக் கொண்டிருக்கும்போதும் இந்தியர்களுக்குள் ஒரு புது உணர்ச்சி தோன்றி பரவிகொண்டிருக்கும்போதும் ரௌலட் ரிப்போர்ட்டும் ரௌலட் சட்டமும் தலைகாட்டவே இந்தியர், தாங்கள் சீர்திருத்தம் பெற முயற்சிப்பதைத் தடுக்கவே இவைகள் கொண்டுவரப்பட்டனவென நினைத்தனர். அச்சமயம் ஜனங்களுக்கிருந்த மனோ உணர்ச்சி என்றுமில்லாதபடி நூதனமாகயிருந்தமையால் டாக்டர் கிச்லுவையும் டாக்டர் சத்தியபாலையும் முன்யோசனையன்றி தேசப்பிரஷ்டம் செய்ததே குழப்பம் விளைவதற்குப் போதுமான காரணமாயிற்று.

இராஜப் பிரதிநிதி மீதும் குற்றமில்லாமற் போகவில்லை. இந்தியா மந்திரியும்

தவறிழைத்தேயிருக்கின்றார். இராஜப் பிரதிநிதி ராணுவ சட்டத்தை அதிகநாள் அமுலில் வைத்திருக்கப் பார்த்திருந்தார். தாமே நேரில் பஞ்சாப்பிற்கு வந்து குழப்பத்தைப் பற்றி விசாரிக்கவுமில்லை. தமது நண்பர் ஸர் சங்கரன் நாயர் சொன்னவைகளுக்கும் காது கொடுக்கவில்லை. சோதனையான காலத்தில் நிர்வாகத்தையும் ஸர்மைக்கேல் ஓட்வியரைப் போன்ற ஒருவரிடம் ஒப்படைத்து விடுவது ராஜப்பிரதிநிதியைப் போன்ற ஒரு பொறுப்புள்ள உத்தியோகஸ்தருக்கு அழகன்று. பஞ்சாப்பில் கஷ்டமடைந்தவர்களின் கஷ்ட நிவர்த்திக்காக இராஜப்பிரதிநிதி பணம் கொடுத்திருக்கின்றாரென்று சொல்லுவதால் அவர் குற்றமற்றவராகமாட்டார். அவரே பஞ்சாப்புக்கு நேரில் வந்திருந்தால் ஸர்மைக்கேல் பஞ்சாப்பின் நிர்வாகத்தை அவரிடம் விட்டு விட்டிருப்பாரென்றும் கலகம் அதிகரித்திருக்குமென்றும் சொல்வது இராஜப்பிரதிநிதியின் புத்திசாலித் தனத்தைப் பாராட்டிப் பேசுவதாகாது. மிஸ்டர் சீனிவாச சாஸ்திரியின் உபந்நியாசத்தைக் கேட்டவர்களின் புத்திசாலித் தனத்தையும் இது எடுத்துக் காட்டவில்லை.

இந்த ரிப்போர்ட்டைப் பற்றி இன்னொரு வார்த்தை. சிற்சில அதிக்கிரமங்கள் ஸத்தியாக்கிரஹிகளின் செயல்களல்லவென்றும், அராஜகப் புரட்சிக்காரர்களுடைய செயலேயென்றும், மிஸஸ் பெஸண்டு 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகைக்கு எழுதியதை ஆதாரமாகக் கொண்டு, பகிரங்கமான கலகம் உண்மையில் ஏற்பட்டதென்ற தங்கள் கட்சியை லார்டு ஹண்டரும் மெஜாரிட்டி மெம்பர்களும் ஸ்தாபிக்கப் பார்க்கிறார்கள். இது ஒழுங்கான முறையென்றாவது, இப்படிப்பட்ட கடிதத்தைப் புக விடுதல் அழகாயிருக்கிறதென்றாவது, நான் சொல்ல முடியாது. மிஸஸ் பெஸண்டு, ஹண்டர் கமிட்டி முன்பாக விசாரிக்கப்படவில்லை. குறுக்கு விசாரணை செய்யப்படவுமில்லை. அவருடைய கடிதத்தை ஆதாரமாகக் கொள்ள நியாயமேயில்லை. ராணுவச் சட்ட அமுலைப் பற்றியாவது, பஞ்சாப்பில் நடந்த சம்பவங்களின் உண்மையைப் பற்றியாவது மிஸஸ் பெஸண்டுக்கு நேரில் தெரியாது. ஆகையால் அவருடைய வார்த்தையை நம்பி ஹண்டர் கமிட்டியார் முடிவெழுதுவது மிஸஸ் பெஸண்டுக்கே நியாயமாய்ப் பிடிக்காது.

“ஹண்டர் கமிட்டி முன்பாக ராணுவ உத்தியோகஸ்தர்கள் கொடுத்த சாட்சியத்தை வாசிக்க என் உடல் நடுங்குகிறது. அவர்கள் தங்கள் வாயாலேயே செய்ததாக ஒப்புக் கொள்ளும் செயல்களை விட அதிகமாய் ஜெர்மானியர் பெல்ஜியத்தில் செய்துவிடவில்லை”

என்று அதே மிஸஸ், பெஸண்டு 1920 28 டிசம்பர் 21-ந்தேதியன்று சொல்லியிருப்பதை ஹண்டர் கமிட்டியார் ஏன் ஆதாரமாகக் கொள்ளக்கூடாதென்று மெஜாரிட்டி மெம்பர்கள் எடுத்துக் காட்டுவதை இங்கு நான் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

ரௌலட் கமிட்டி, ஹண்டர் கமிட்டி முதலிய கமிட்டிகளினின்றும் இந்தியப் பொதுஜனங்கள் ஒரு சிறந்த படிப்பினையைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது இந்தியாவின் நிர்வாக விஷயமாகவாவது சில அதிகாரிகளின் நடத்தையையாவது விசாரிக்க ஏற்படும் கமிட்டிகளில் ஐரோப்பியர்களாவது உத்தியோகப்பற்றுள்ள இந்தியராவது ஐரோப்பியராவது மெஜாரிட்டி ஸ்தானங்களை வகிக்கக் கூடாதென்பதேயாம். கமிஷன்களும் கமிட்டிகளும் இந்திய சட்டசபைகளால் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படியன்றி கவர்ன்மெண்டாரே ஏற்படுத்தினால் அதில் உத்தியோகப் பற்றில்லாத இந்திய அங்கத்தினர்கள் மெஜாரிட்டி ஸ்தானங்களை வகிக்க வேண்டும். காமன்ஸ் சபை மெம்பர்களில் ஒருவராவது உத்தியோகப் பற்றில்லாத இந்தியர் ஒருவராவது அதற்குத் தலைவராக வேண்டும்.

காங்கிரஸ் சப்கமிட்டியின் ரிப்போர்ட்டு இப்பொழுது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. அது ஒவ்வொரு இந்தியரிடமுமிருக்க வேண்டியது அவசியம். காங்கிரஸ் சப்கமிட்டிக்கு மகாத்மாகாந்தி தலைவராகவிருந்தார். அவர் உண்மைக்கும் நியாயத்திற்கும், இரக்கத்திற்கும் உறைவிடமாவார். ஹண்டர் கமிட்டி முன் சாக்ஷியங்கொடுத்தவர்கள் எல்லாம் உத்தியோகஸ்தரேயென்றும், உத்தியோகஸ்தரல்லாதார் எவரும் சாக்ஷியாய் கேட்கப்படவில்லையென்றும் மைனாரிட்டி ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படியிருக்க நாம், மிக்க ஜாக்கிரதையுடன் எழுதப்பட்டிருக்கும் மெஜாரிட்டி ரிப்போர்ட்டைப் படிக்கும்போதே அளவில்லா ஆத்திரமுண்டாகின்றது. சரியாக அமைக்கப்பட்ட ஒரு கமிட்டி பஞ்சாப் குழப்பங்களை விசாரித்திருந்தால் எவ்வளவு மேன்மையாகவிருந்திருக்கும். ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் அவசியமே ஏற்படவில்லை என்று இந்திய அங்கத்தினர்கள் சொல்லியிருப்பதை இந்தியா மந்திரியும் இந்தியா கவர்ன்மெண்டாரும் அங்கீகரிக்காத காரணமென்னவோ தெரியவில்லை. ஸர். ஸி. செதால்வட் வக்கீல் வேலையில் மிக்கத் திறமை வாய்ந்தவர். உறுதியுள்ள மிதவாதி. இவர் சத்தியாக்கிரஹ விஷயத்தில் மகாத்மா காந்தியின் அபிப்பிராயத்திற்கு வேறுபட்ட அபிப்பிராயங் கொண்டார். லார்ட் ஹண்டருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் எவ்வளவு மரியாதையுண்டோ அவ்வளவு மரியாதை ஸர் செதால்வட்டுக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் உண்டென்றே நம்புகின்றேன். இங்கிலாந்திலுள்ள எல்லா ஆங்கிலேயரும் பஞ்சாப்பில் நடந்த அட்டூழியங்களை அறியும்படிச் செய்ய வேண்டும். இந்தியரின் கௌரவத்திற்கு ஹானி விளைக்கத் தக்க தண்டனைகள் விதிககப்பட்டதை வாய்விட்டுத் தாராளமாய் எடுத்துச் சொல்ல முடியாமல் இந்தியர்கள் கஷ்டப்படுவதையும் இங்கிலாந்திலுள்ளவர்கள் அறியவேண்டும். மிஸ்டர் மாண்டேகு ரிப்போர்ட்டை வெளியிடாமலே பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொண்டது புத்திசாலித்தனமாகவிருக்கலாம்.

ஆனால், இந்த உபாயம் எந்தக் கக்ஷிக்காரரையும் திருப்தி செய்விக்காது இதனால் கிளர்ச்சியும் அடங்கிவிடாது. இங்கிலாந்து தன் கடமையைச் சரிவர நிறைவேற்றுமென இந்தியா எதிர்பார்க்கின்றது. ஜன நாயக ஆட்சி முறையின் பயனால் இங்கிலாந்து தற்போதிருக்கும் சிறந்த நிலையை அடைந்தது. அவர்கள் கொண்டிருக்கும் சுதந்தரக் கொள்கையையும் கவனித்து ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் பஞ்சாபில் ராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது போல் தங்கள் நாட்டில் ஆங்கிலேயருக்கு அச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தால் எவ்வாறு நடந்துகொள்ளுவார்களோ அவ்வாறு நடந்து சரியானபடி நியாயம் வழங்குவார்களென எதிர்பார்க்கின்றோம். பஞ்சாபில் தவறாக நிர்வாகம் நடத்தியதைப் பார்த்தால், விருத்தியடைந்து வரும் ஒரு வியாதியின் அறிகுறியைப்போல் இருக்கின்றது. அதை இன்னும் விருத்தியடையவிடாமல் பரிகாரம் தேடவேண்டும். எந்த உண்மையான ஆங்கிலேயரும் சரியாக விஷயங்களை யறிந்தவர்களும் மெஜாரிடி ரிபோர்ட்டைப் படித்தால் கூட ஸர் மைக்கேல் ஓட்வியரும் ஜெனரல் டயரும் கர்னல் ஜான்ட்னும் இந்தியாவையோ ஏகாதியத்தியத்தையோ ஆபத்தினின்றும் காப்பாற்றினார்களென்ற கட்டுக்கதையை நம்பமாட்டார்கள். அவர்கள் ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றக் கூடியவர்களல்ல. ஆனால் அதன் வேர் அறும்படி ஆட்டிவிடக்கூடியவர்களே. சகோதரப் பிரதிநிதிகளே இது விஷயமாய் நாம் இங்கிலாந்தில் சலியாத கிளர்ச்சி செய்து வரவேண்டும். தவறிழைத்தவர்களை சரியான தண்டனைக்குட்படுத்துவதற்கேற்ற வழிகளையும் கண்டுபிடிக்கவேண்டும்.

கிலாபத்து விஷயம்.

துருக்கிக்கு விதிக்கப்பட்டிருக்கும்சமாதான நிபந்தனைகள் கிலாபத்தின் அந்தஸ்துக்கும் இஸ்லாத்தின் தருமத்துக்கும் விரோதமாயிருப்பதாக இந்திய முஸ்லிம்கள் உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். மகா யுத்தத்தின் போது மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் கொடுத்த உறுதி மொழிக்கு நேர் எதிரிடையாய் இப்போது நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

“ஜாதியில் பெரும்பாலும் துருக்கியரே வசித்துவரும் அப்பெரிய நாடுகளாகிய ஆசியா மைனரையும். திரேஸையும் துருக்கியின் கையிலிருந்து பிடுங்கி விடுவதற்காக நாங்கள் சண்டை போடவில்லை”

என்று மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் அப்பொழுது சொல்லிவிட்டு, இவ்வளவு சீக்கிரத்தில் அதை மறக்கவுஞ் செய்துவிட்டார் ஆகையால் முஸ்லீம்களின் குறைகள் நியாயமேயென்பதில் சந்தேகமில்லை. கிலாபத்திற்குக் குறைவு ஏற்படாமல் சமாதான நிபந்தனைகளைத் திருத்தியமைக்க கிரேட்பிரிட்டனால் முடியுமென்போதமென்று முஸ்லீம்கள் மனப்பூர்வமாய் நம்புகின்றனர். இந்த நம்பிக்கை ஹிந்துக்களுக்குமுண்டு. ஆகையால் தான் முஸல்மான் சகோதரர்களின் கிளர்ச்சியை ஹிந்துக்கள் ஆதரித்து வருகிறார்கள். காலஞ்சென்ற கோகலேயும், அவருக்குப்பின் காந்தியும், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை வளர்த்துவர அரும்பாடுபட்டிருக்கும்போது அவ்வொற்றுமையைப் பாதுகாக்கவேண்டியது இந்தியருடைய கடமை. ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை ஒரு விலையில்லா மாணிக்கமென்றே சொல்லவேண்டும். கிலாபத்து சம்பந்தமாய் முஸ்லீம்களின் நோக்கம் நிறைவேறும் பொருட்டு செய்யப்படும் முயற்சிகளில், ஹிந்துக்களின் மனப்பூர்வமான ஆதரவு அவர்களுக்கு நிச்சயம் கிடைக்குமென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. முஸ்லீம்களின் உணர்ச்சியை மதித்து நடக்கவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டாரே தங்கள் குறிப்பில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பல்விதங்களிலும் இந்திய முஸல்மான்கள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு உதவி புரிந்திருந்தவர்கள். ஆழ்ந்த ராஜவிஸ்வாஸத்துடன் நெடுங்காலமாய் இருந்து வந்திருக்கின்றனர். முதன் மந்திரியின் உறுதிமொழியை மீறாமலும், இந்திய முஸ்லீம்களின் விருப்பப்படியும், கிலாபத்து பிரசனையைத் தீர்த்து வைக்கவேண்டுமென்று சென்ற வருஷத்திய காங்கிரஸில் கூட ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இங்கிலாந்திலும் மற்ற தேசங்களிலுமுள்ள சில பிரபல ராஜதந்திரிகளுக்கு இஸ்லாமியரின் உண்மையான உணர்ச்சி தெரியாததனாலேயே சமாதான நிபந்தனைகள் இவ்வளவு மோசமாய் விதிக்கப்பட்டிருக்கின்றன. பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா ஆகியவிடங்களில் தீவிரமான பிரசாரவேலை செய்து, இங்கிலாந்தும் சிரத்தையுடன் உதவி செய்தால், முஸல்மான்களின் விருப்பப்படி சமாதான உடன்படிக்கையைத் திருத்தியமைத்துவிடக்கூடும். இனி செய்யவேண்டிய கிளர்ச்சியைப்பற்றி ஒரு மனதான அபிப்பிராயம் முஸ்லீம்களுக்குள் இன்னும் ஏற்பட்டிருக்கவில்லை. ஒருமனதான அபிப்பிராயத்திற்கு முஸல்மான்கள் வாராதவரையில், எந்த ஒரு கட்சியாரோடும் ஹிந்துக்கள் சேர்ந்துகொள்வது விரும்பத்தக்கதல்லவாகையால், முஸ்லீம் லீகுகூடி எந்த விதமான உதவியை இந்தியர்களினின்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்களென்பதைக் தெரிவித்தால் நலமாயிருக்கும். ஒத்துழையாமை என்ற முறையை அனுஷ்டித்துப் பார்க்கலாமென்று மிஸ்டர் காந்தி ஒரு யோசனை சொல்லியிருக்கிறார். இதைப்பற்றி ஆலோசித்து முடிவு செய்வதற்காக காங்கிரஸ் மகாசபையார் விசேஷக் கூட்டமொன்றை நடத்திவைக்கப்போகிறார்களாகையாலும், அது விவாதத்துக் கிடங்கொடுக்கக்கூடிய பிரசனையாய் இருப்பதாலும், இச்சந்தர்ப்பத்தில் அதைப்பற்றி எனது சொந்த அபிப்பிராயத்தை தெரிவிக்கலாகாதென்று நினைக்கிறேன்.

(இன்னும் வரும்)

(2ம் பக்கம் தொடர்ச்சி.)

பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும் என்ற பழமொழிக்கேற்பப் பஞ்சமேற்பட்ட சின்னாளில் பிளேக் எனுமோர் தொற்று நோய்பூனாவில் பரவியது. மிதவாதிகளென வழங்கப்படும் போலித்தலைவர்கள் உயிருக்கஞ்சி ஊரைவிட்டோடினர். திலகர் பெருமான் அவ்விதஞ் செய்யாது பூனாவிற்றங்கி வியாதியை யொழிக்க முயற்சி செய்து வந்தார். எவ்வளவோ இரவுகள் தூக்கமின்றி வீடுகடோறுஞ் சென்று வேண்டிய பணஞ் சேகரித்து 'இந்துபிளேக் ஆஸ்பத்திரி' யெனுமோர் வைத்தியசாலையைத்தாபித்தார். இக்கொள்ளைக்காய்ச்சலைத் தவிர்க்கும்பொருட்டு அரசாங்கத்தார் அனுசரிக்கும் முறைகளைப் புகழ்ந்தும் அவர்களுக்குத் தகுந்த உதவிபுரிய வேண்டுமென்றும் பத்திரிகைகளில் எழுதிவந்தார். பிளேக் வியாதிபலப்படாமலிருக்க வேண்டிப் பரிகாரங்கள் தேடுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த ராண்ட் முதலிய ஆங்கில வதிகாரிகளோடு திலகர் வீடு வீடாய்ப் போவதுவழக்கம். கல்வியிலாப்பாமரர்களுக்குத் தைரியமூட்டி வருவார். ஒதுக்காஸ் பத்திரியில் ஓர்சமையலறையுண்டாக்கி தன் செலவில் நோயாளிகளுக்கு அன்னமளிக்கும் படி செய்தார். ராணுவ உத்தியோகத்தினர் வியாதியை கவனிக்கும் சம்பந்தமாய்ச் செய்த அட்டூழியங்களைப் பல மாகக்கண்டித்துப் பொதுஜனங்கள் பிளேக் அதிகாரிகளாற்படும் துன்பத்தைப் பம்பாய் கவர்னருக்கும் ராண்டுக்கும் கடிதங்கள் மூலமாய் அறிவித்து வந்தார். படிப்பில்லாதவர்களை யதிகாரிகள் பயமுறுத்தலாகாதென்றும் அவர்களுக்குப் பிளேக் வியாதியின் கொடுமையை நயமாக வெடுத்துக் கூறிச் சீர்திருத்த முறைகளை அனுட்டிக்கும் படித் தூண்டவேண்டுமெனவும் வியாதியில்லாதவர்களையும் மாதர்களையும் காரணமின்றிப் பிடிவாதத்தினால் விலக்கிடங்களுக்குக் கொண்டுபோகலாகாதெனறும் அவர்களை மானபங்கப்படுத்தலாகாதெனவும் தனது பத்திரிகைகள் வாயிலாக வற்புறுத்தி வந்தார். பிளேக் வேதனைபடுவோரைத் தனது வைத்தியசாலையில் சிகிச்சை செய்துவந்தார்.

சஞ்சாவூர் 2–7–20 } ஆர். கணேசன்

சாவித்திரியின் சரிதம்.

பண்டிதர் உலகநாதபிள்ளை எழுதியது.

இரண்டாம் பிரதியின் 12-வது பக்கத் தொடர்ச்சி.

தம் தந்தை சென்ற பின்பு, அடையணிகலம் வேண்டாது மாவுரி தரித்து, இனிய சுவை வாய்ந்த உண்டியை வெறுத்துக் காய்கனி அருந்தி அஞ்சடுக்கிய பஞ்சணை மீது பள்ளி கொள்ளாது கையே அணையாகத் தரையில் துயின்று, தமக்கான செய்வதற்கு யாரையும் விரும்பாமல் கணவனுக்கான பணிவிடைகளைத் தாமே வழுவாதியற்றி, நகமும் தசையும் போலப் பிரியாது, வாழ்ந்திருக்கையில், நாரத முனிவர் கூறிய ஒரு வருடத்தில், நான்கு நாட்கள் ஒழிய ஏனைய நாட்கள் பறந்து செல்லக்கண்ட சாவித்திரி, 'இனி வாளா இருப்பது கூடாது; மங்கையர்கள் மாங்கல்ய வளர்ச்சிக்கு ஏதுவாயிருப்பது கௌரி விரதம், அதனை அனுஷ்டித்தவர் அடையாத பேறில்லை என்பர் ஆதலால் யாதும் காலதாமதமின்றி அதனையே கைக்கொள்வது தக்கது" எனத் தமக்குள் முடிவு செய்துகொண்டு, நீராடி ஊணுறக்கம் நீத்து, ஒருமைப்பட்ட தமதுளத்தில் கௌரியை தியானித்து ஒரு புறம் இருந்தனர்

இவ்வண்ணம் கடிய நோன்பு அனுஷ்டிக்க, மூன்று நாள் கழிய நான்காம் நாள் வந்தது. "இன்றைய தினந்தான் முனிவர் சொல்லிய கடைசி நாள்; என்நாயகருக்கு எச்சமயத்தில் எதுவருமோ அறிந்திலேன். அரைக்கணமேனும் அவரைப் பிரியாமல் பின் தொடர்ந்து செல்லுவேன்" எனத் தீர்மானித்து, சத்தியவானை அணுகி, "நாயக! நான் இங்கு வந்து இத்தனை நாளாகியும், இக்கானகத்தைக் கண்டறியேன், பார்க்கவேண்டும் என்னும் விருப்பம் அதிகரிக்கின்றது, இன்று செல்லும் பொழுது என்னையும் அழைத்துப் போகவேண்டும்" என வேண்டினர்.

பெண்ணே! நீ சொல்லிய வண்ணம் ஒன்றுரைப்பேன் கேள்; மூன்று நாளாக நீரும் பருகாமல் கண்ணும் உறங்காது கடிய விரதம் ஆற்றினை அதனால் தீயிடைப்பட்ட மலர் மாலைபோல உன் உடம்பு வாடிப்பொலிவழிந்திருக்கின்றது, இன்று பாரணம் செய்து இளைப்பாறியிரு நாளை அழைத்துச் செல்வேன்' என்றனன்.

"தீபம் கண்ட பின் பாரணம் செய்வேன், அந்நேரமளவும் தனித்திருப்பேனாயின், பகலும் நீட்டிக்கும், துயிலும் வரும் பாரணை தினத்தில் பகற்பொழுதில் தூங்கினவன் பார்ப்பாரைக் கொன்ற பழியடைவன் என்பார்கள். கூடவருவேனாயின், இத்தகைய பழிபாவங் கட்கு ஆளாகேன், என எண்ணமும் நிறைவேறும். ஆதலால், என சொல்லை மறுத்திடாது அழைத்துப்போக வேண்டும், என மீளவும் இரந்தனர். 'அன்னம்போலும் மென்னடையாய்! நின் எண்ணம் இதுவாயின் என்னுடன் வருக' என்றுரைக்க சாவித்திரியும் உடன் போவாராயினர்.

அங்கு, பளிங்கைக் கரைத்து வார்த்ததுபோலத் தெளிந்த நீரையுடைய சிற்றருவிகள் இடையறாதுபாய, கம்பலம் பரப்பினாற்போல எங்கும் பசும்புற்சொறிய மண் மகள் கொண்ட புன்னகையென்ன முல்லையரும்ப, மாயவன் உருவம் போற் காயாமலர, கொன்றை பொன் சொரிய, தீர்த்திரைகள் குழலென முழங்க, வண்டுகள் யாழ்முரல, சில்லையும் காகணமும தெள்ளிசை பாட, மயிலாடக் குயில் கூவ, இன்னிலந் தோன்றல் நன்மணம் வீச, வானகம் மீன்கணத்தோடு வந்திருந்ததுபோல், மலர்க்கொத்தும் பழக்கொல்லையும் இடையிடை தூங்கத் தழைத்துச் செழித்து, கதிரவன் கரமுந் தீண்டற் கரியதாய்க் குளிர்த்து, கண்டவர் மனத்தையும், கண்ணையும் சிறைப்படுத்தும் தண்டலை நடுவே களிற்றின்பின்செல்லும் இளம் பிடிபோல சத்தியவானோடு செல்லும்

சாவித்திரியம்மை, கருமமே கண்ணாயினாராதலால் சோலையின் வனப்பையும் நோக்கிலர், பறவைகளின் பாட்டிசையும் கேட்க விரும்பிலர், பழுத்துக் கனிந்து கைக்கெட்டத் தூங்கும் பழங்களையும் பறித்துச் சுவைத்திலர், இன்சுவை வாய்ந்த தண்ணீரைக் கைகளால் முகந்து குடித்திலர், மலர்களைக் கொய்து மணங்காணவும் தலையிற் சூடவும் நினைத்திலர், அரிமா, வரிமா, கைமா, முதலிய கொடிய விலங்குகளின் இடி போன்ற முழக்கத்திற்கும் அஞ்சிலர், ஐம்புலன்களையும் வென்ற யோக்கியரைப்போல ஒன்றினும் பற்றின்றி எப்பொழுது எது நேருமே என்னும் கவலையோடு கண்ணும் கருத்தும் கணவனிடம் வைத்து கணமேனும் அவனை விட்டகலாமல் நிழல் போல தொடர்வாராயினர்.

இவ்வாறாகச் செல்லும்பொழுது தருப்பை கவர்ந்தும், சமிதை ஒடித்தும், காய்கனி பரித்தும் மலர் கொய்தும் வண்டுபோல எங்கும் சுற்றித்திரிந்த சத்தியவான் ஒரு பெரிய மா நிழலை அடைந்த உடனே சாவித்திரியை நோக்கி, "பெண்ணே" என் கண்கள் கலங்கின்றன. மனம் பதைபதைக்கின்றது. கைகால்கள் சோர்வடைகின்றன. பேசுதற்கு நாவெழுந்திலது, என் செய்வேன், என்று சொல்லிக்கொண்டே அவரது மடிமிசைத் தன் தலையை வைத்து தரையிற் படுத்தனன்.

சிறிது நேரத்திற்கெல்லாம், கண்கள் பஞ்சடைய, பற்கிட்டி கைகால்கள் அசைவொழிந்தன. மூச்சும் நின்றுவிட்டது. நெருப்பை மடியில் கட்டிக்கொண்டிருப்பவர் போலக் கணவன் செய்கையைக் கவலையோடு நாடியிருந்த சாவித்திரியம்மை மனம் துடித்து 'தேவி! என் செய்குவேன்! யாருமற்ற பாவியாகிய எனக்கு உன்னையன்றித் துணையாவார் ஒருவருமில்லை. எல்லாச் சீலர்களையும் பெற்றுக் காக்கும் அன்னையே! உன்னைப்போல் யானும் ஒரு பெண்ணன்றோ? என் மீது நீயே கருணை செய்யாவிடின் வேறு யாரே செய்திடுவார்? உன் விரதம் நோற்றவர்க்குத் தாலி வளரும் என்பார்களே! அதுவும் என் விஷயத்தில் பொய்யாய் முடிந்ததே, எவரும் கொண்டாடும் உன் விரத மகிமையும் என்னால் பொய்படுதல் நீதியோ? கருணையங் கடலே; உன் பற்றொழிய எனக்கு ஒரு பற்றுமில்லை, தாயே நீயே தஞ்சம்; அஞ்சேல் என்பவர் யாருமில்லை. என் கணவன் உயிரை மீட்பது நின்பாரம்ப எனக் கண்ணீர் வார மெய்ம்மயிர்சிலிர்ப்ப, கௌரியை மனம் உருகித் துதிக்கும்பொழுது மார்பில் பொன்னரி மாலை துலங்க கைகளில் தண்டமும் பாசமும் தாங்கி கருத்துப்பருத்த மேனியோடு தென்றிசைக் கோமானாகிய யமன் போந்து தம் கணவனதுயிரைக் கைப்பற்றிச் செல்வது இவர் கண்ணுக்குப் புலனாயிற்று. அந்தோ! யாது செய்வார்? வெயிலிடைப்பட்ட புழுப்போல் துடித்தனர். கண்கள் முத்து. திர்த்தனயாருமற்ற கானகத்தில் சன்னந்தனியே இருந்த இவரது நிலைமையை அம்பிகையே யன்றி எவர் தாம் அறிய வல்லார்? ஆயினும் தம் மனதைச் சிறிது தைரியப்படுத்திக் கொண்டு, மடியிலிருந்த சத்தியவானுடைய தலையைத் தரையில் வைத்துவிட்டு, எழுந்து எமனை கைகுவித்து வணங்கி "ஐயனே! நீர் யார்? என் கணவன் உயிரை நீர் கொண்டு சொல்வதற்குக் காரணம் என்ன?" என வினவினர்.

(இன்னும் வரும்)

தேசபக்தி.

பக்தி யெனனும் வார்த்தைக்குப் பிரதிப்பதம் கூறுவோமானால் நம்பிக்கை அல்லது மன உறுதி யென்னும் பதம் ஒருவாறு பொருந்துமென்று சொல்லலாம். மன உறுதி அல்லது நம்பிக்கை யென்பது சன்மார்க்கத்திலும், நல்ல விஷயத்திலும் ஏற்படல்வேண்டும். மன உறுதி நாளுக்கு நாள் அதிகப்பட்டுக்கொண்டுவரின் அநேக நற்குணங்களை அடைவதற்கு இடமிருக்கின்றதென்று சொல்லுவதற்கய்யமேயில்லை. அந்நற்குணங்களை சரியாகக் கடைப்பிடித்து, அவைகளிடத்தில் பூரணபக்திகொண்டு, உயிர்போகநேரினும் மன உறுதியுடன் கடைப்பிடித்துவந்தால் பக்தியின் மேன்மையால் நல்ல பதவியை அடையலாம்.

அரிச்சந்திர மகாராஜன், சத்தியமென்னும் தர்மத்தில், திரளான மனஉறுதிகொண்டு, அதைக் கடைப்பிடிப்பதினால், மேன்மைவாய்ந்தவனாய் விளங்குவானென்பதை யுணர்ந்து அதில் மிக்க நம்பிக்கைகொண்டு மெய் சொல்வதேயே பெரிதாக யெண்ணினான். தன் நாடுநகரங்களை யிழந்தபோதிலும், தானும் தன் மனைவி, புத்திரனும் அடிமைகளானபோதிலும், தன் க்ஷீணதசையை ஒரு பொய் சொல்லுவதினால் நீக்கிவிடலாமென்பதை அறிந்தும், சத்தியத்தைக் கடைப்பிடிப்பதிலேயே கண்ணாயிருந்தான். விசுவாமித்திர முனிவர், ஒருபொய் சொல்லும்படி அவனைக்கேட்டும், அவன் அதற்கு மறுத்து, சத்தியத்திற்குயர்ந்த தர்மமில்லை யென்பதையறிந்து, அதில் நிரம்பிய பக்திபூண்டு அதைக் கடைப்பிடித்து வந்ததினால் கடைசியில் நல்ல பதவியை அடைந்தான்.

நம் புராணங்களில், அரிச்சந்திர மகாராஜன் போல், அநேக புண்ணிய புருஷர்கள், சன்மார்க்கத்திலும் நல்ல விஷயத்திலும் மிக்க மனஉறுதி கொண்டு எவ்வாறு தங்கள் கருமத்தில் வெற்றியடைந்தார் வென்பதைப்பற்றி நன்கு தெரிந்துகொள்கின்றோம். பிரக்லாதனும், நந்தனும், ஈசுவானிடத்தில் நிரம்பிய பக்திகொண்டு, அவர் திருபாதங்களை யடைவதிலேயே மிக்க மன உறுதி ஏற்பட்டு, அநேக கஷ்டங்களுக்குள்ளாகி சிறிதேனும் பக்தி குன்றுமாலிருந்தபடியால், கடைசியில் நற்பதவியை அடைந்தார்களென்பது நம் நேயர்களறிவார்கள்.

தற்காலத்தில் நம் இந்திய நாட்டில் அநேக புண்ணிய புருஷர்கள் தேச ஊழியம் செய்யும் பொருட்டு முன் வந்திருக்கின்றார்கள். அவர்கள் தங்களாலியன்றமட்டும் தாய் நாட்டிற்கு தேச சேவை செய்யும் பொழுது, சுய நலத்தைப் பாராட்டாமல், பொது நலத்தை பெரிதாக கருதவேண்டும். தாங்களெடுத்துக்கொண்ட நற்காரியத்தைச் சைக்கூடுவதில் மிக மன உறுதிகொண்டு அதைப்பூர்த்தி செய்யவேண்டுமேயல்லாமல், கீர்த்தியையும், புகழையும் அடையக் கருதக்கூடாது. ஊழியம் செய்யுங்கால், தாங்கள் எடுத்துக்கொண்ட கருமத்தில் பக்திகுன்றின் கருமத்தை சரியாய் பூர்த்தி செய்வதை மறந்துவிடுவது அழகல்ல. நற்காரியத்தைச் செய்யத் தொடங்கும்பொழுது, அநேக இடையூறுகளும் அக்காரியம் முடியாவண்ணம் அதைத்தடுக்க அநேக விரோதிகளும் ஏற்படுவது சகஜந்தான். ஆனால் தேச ஊழியர்கள் இவ்விடையூறுகளை பெரிதாக நினையாமலும், விரோதிகளோடு வார்த்தையாடி அதனால் தங்கள் கருமத்திற்கு ஹானிவராமல், கருமமே கண்ணாயினாரென்பதுபோல், தேச ஊழியத்தில் கண்ணாயிருந்து தங்கள் கருமத்தில் பக்திகொண்டு அதைப் பூர்த்திசெய்யவேண்டும். அப்படி செய்கின்றவர்கள்தான் தேசபக்தர்கள். தேசாபிமானிகள் அவ்வாறில்லாமல், கருமத்தை பூர்த்திசெய்வதை மறந்து சண்டை சச்சரவுகளில் புகுந்தால், காரியங்கைகூடாது. நம் தாய்நாடு முன்னேற்றத்திற்கு கெடுதலுண்டாகும். ஆகலால் தருமத்தில் மனஉறுதி கொண்டு, தேச ஊழியம் செய்பவர்களே தேச பக்தர்களாவார்கள்.

தற்காலத்து தேசபக்தர்களுக்கெவ்வாறு தங்கள் கருமத்தில் பக்திகொண்டு தேச முன்னேற்றத்திற்கு பாடுபடுவதென்பதை பிரத்தியக்ஷமாக விளக்கிக்காட்ட அவதார புருஷன் மகாத்மா காந்தி. கலியுகத்து அரிச்சந்திரனாய் விளங்கும் அம்மகான் சத்தியத்தை ஆயுதமாகக்கொண்டு கொண்ட கருமத்தில் எள்ளளவேனும் பக்திகுன்றாமல் அதைப் பூர்த்திசெய்வதிலேயே கண்ணாயிருக்கின்றார். எவ்வளவு இடையூறுகள்வந்தாலும் அவைகளை தனக்குச் சாதகங்களாகக் ஏற்படுத்திக்கொண்டு காரியத்தில் வெற்றிபுரிகின்றனர். இதை விளக்கிக்காட்ட அவருடைய தென் ஆப்பிரிக்கா ஊழியமும், கெயிரா சமாசாரங்களையும்பற்றி சொல்லலாம். இச்சமாசாரங்களை நம் நேயர்கள் நன்கு அறிவார்கள்.

ஆகையால் தேசாபிமானிகளே! தேசபக்தர்களே! நம் இந்தியநாடு முன்னேற்றமடையும் பொருட்டு, கைக்கொண்டகருமத்தில் பூரணபக்தி கொண்டு அதை முடிப்பதில் கண்ணாயிருங்கள். புகழையும் கீர்த்தியும் ஆவலுடன் எதிர்பார்க்காதீர்கள். அவைகளை அடைவதை நினைத்தால் நம் இந்தியநாடு மேன்மையடையாது. ஆதலால், கொண்ட கருமத்தில் பக்திகொண்டு காரியத்தை முடிக்க தேச ஊழியம் புரிந்துகொண்டு சிறந்த புண்ணிய புருஷர்களாக விளங்குவீர்களாக.

சச்சிதானந்தம்.

மதிப்புரை.

வைசிய மித்திரன்.

காரைக்குடியில் பிரசுரமாகும் வைசிய மித்திரன் எனும் வாராந்தப் பத்திரிகையின் பிரதியொன்று வரப்பெற்றோம். அதில் விவசாயம், கல்வி, வர்த்தகம், கைத்தொழில், சுகாதாரம் முதலிய விஷயங்கள் வெகு அழகாக எழுதப்பட்டிருக்கின்றன. அதுவுமல்லாமல் அரசியல் விஷயங்களும் தெளிவாக அதில் விவரிக்கப்படுகின்றன. இதன் வருடசந்தா ரூ 5. வேண்டுவோர் வைசியமித்திரன் மானேஜர் அவர்களுக்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்துசாதனம்.

இப்பத்திரிகை வாரந்தோறும் யாழ்ப்பாணத்தில் வெளியாகின்றது. இதன் பிரதியொன்று எமது பார்வைக்கு வந்திருக்கின்றது. இப்பத்திரிகையில் இனிமையான தமிழில் நல்ல விஷயங்களைப்பற்றி வியாஸங்களெழுதப்பட்டிருக்கின்றன.

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yellaiamman Koil Street, Tanjore.